விலை: 50.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 21 புதன்கிழமை (07.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 293

## யாழ்ப்பாண குடாநாடு எந்நேரமும் முடக்கப்படலாம் அவசர நிலைக்கு மக்கள் தயாராக இருக்க வேண்டும்

### யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாடு எந்நேரமும் முடக்கப்படலாம். பொது மக்கள் அவசர நிலைக்கு தயாராக இருக்க வேண்டும் என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ.மாவட்ட கொரோனா ஒழிப்பு செயலணி நேற்று அவசரமாக கூடியது. குறித்த கூட்டத்திலேயே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டம் தற்போதைய அனர்த்தத்தை மிகவும் சிக்க 23

## உடுவிலிலும் வீடு புகுந்து தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

உடுவிலிலும் வன்முறைக் கும்பல் ஒன்று வீடு புகுந்து தாக்குதல் 23

## யாழில் நேற்று 173 பேருக்கு கொரோனா பரிசோதனை



### எவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 173 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்றில்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ம-3,18)

## ஆடைத் தொழிற்சாலையில் 832 பேருக்கு தொற்று உறுதி

### நேற்று மட்டும் 739 பேர் அடையாளம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா உச்சமடைந்து காணப்படுகின்றது.

கம்பஹா மாவட்டத்திலுள்ள மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய 832 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்று மட்டும் 739 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## இணுவிலில் வன்முறைக் கும்பல் வீடு புகுந்து தாக்குதல்

### இரு மோட்டார் சைக்கிளும் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

வீடு ஒன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் ஒன்று அங்குள்ள பொருட்களைச் சேதப்படுத்தியும் மோட்டார் சைக்கிள்கள் இரண்டைத் தீ வைத்து எரியூட்டியும் அட்டூழியத்தில் ஈடுபட்டு விட்டுத் தப்பித்துள்ளது.

இணுவில் துரை வீதியில் உள்ள வீட்டிலேயே நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் 23

## புதுக்குடியிருப்பில் வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தேராவில் பகுதியில் வீடு ஒன்றில் தனிமையில் வாழ்ந்த வயோதிபர் சடல 23

## யாழின் அபாய பிரதேசமான புங்குடுதீவு முழுமையாக முடக்கப்பட்டது

### 1212 குடும்பங்களைச் சேர்ந்த 3915 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவில் பெண் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளானதையடுத்து அந்தப் பகுதியிலுள்ள ஆயிரத்து 212 குடும்பங் 23

## நாடு முழுவதும் கூட்டங்கள் நடத்தத் தடை

(கொழும்பு)

நாடு முழுவதும் கண்காட்சிகள், பெரிய மாநாடுகள், களியாட்டங்கள், உட்புற மற்றும் 23

## குளத்தில் குளித்த சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

(கிளிநொச்சி)

நாவல்பழம் பிடுங்கி உண்ட பின்னர் நண்பர்களுடன் சேர்ந்து குளத்தில் குளித்த சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

இந்த துயர சம்பவம் புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இடைக்கட்டு குளத்தில் 23

## நாவலர் வீதியில் ரயில் விபத்து ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புகையிரதத்தில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று 1.30 மணி 23

## உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகள் தொடர்பில் இன்று இறுதி தீர்மானம்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகள் நடத்துவது தொடர்பான இறுதி தீர்மானம் இன்று எடுக்கப்படும் என அமைச்சர் 23

## காய்ச்சல் உள்ளிட்ட கொரோனா அறிகுறி இருந்தால் உடனடியாக சிகிச்சை பெறுங்கள்

### புறக்கணிப்போர் மீது அரசு நடவடிக்கை

(கொழும்பு)

காய்ச்சல் உள்ளிட்ட கோவிட்-19 நோய்த் தொற்று அறிகுறிகள் உள்ளவர்கள் அருகிலுள்ள பொது வைத்தியசாலையில் உடனடியாக சிகிச்சை பெறுமாறு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த உத்தரவை புறக்கணிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு குறிப்பிட்டுள்ளது.

மேலும் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையின் அனைத்து ஊழியர்களும் அவர்களது 23

## புங்குடுதீவு யுவதி கடந்த வாரமும் யாழ் வந்துள்ளார்

### திருமண நிச்சயமும் நடைபெற்றுள்ளது

(யாழ்ப்பாணம்)

கொரோனாவுடன் அடையாளம் காணப்பட்ட புங்குடுதீவு யுவதிக்கு அண்மையில் திருமண நிச்சயதார்த்தம் நடந்த தகவல் வெளியாகியுள்ளது.

மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனை இலங்கை இராணுவம் கொல்லவில்லை

## பாராளுமன்றில் சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன், விடுதலைப் புலிகள் அமைப்பின் குழந்தைப் படையணியின் தளபதியாக இருந்தார், அவரை இராணுவம் கொல்லவில்லை என பாராளுமன்றத்திற்குள் வெடிகுண்டு வீசியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

நேற்று (6) பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் உரையாற்றிய போது இதனை தெரிவித்தார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரசின் எம்.பி செ.கஜேந்திரன் உரையாற்றிய போது, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனிற்கு பிஸ்கட் கொடுத்து இராணுவம் சுட்டுக் கொன்றது என குற்றம்சாட்டினார்.

இதை மறுத்தார் பொன்சேகா.

அவர் உரையாற்றியபோது, "பிரபாகரனின் மனைவி விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராக இருந்தார். அவரது மூத்த மகன் விடுதலைப் புலிகளின் கேணல் தர அதிகாரி. அவரது மகள் விடுதலைப் புலிகள் அமைப்பின் மகளிர் பிரிவில் உறுப்பினராக இருந்தார். அவரது இளைய மகன் விடுதலைப் புலிகள் அமைப்பின் குழந்தை படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாக இருந்தார்" என்று பொன்சேகா குறிப்பிட்டார்.

"2009 இல் ஊடகங்களில் பரப்பப்பட்ட படத்தில் பிரபாகரனின் இளைய மகன் சாரம் அணிந்தபடி காணப்பட்டார். அவருக்கு அருகில் சீருடையுடன் சிலர் இருந்தார்கள். அந்த சீருடையை கவனித்தால், இந்திய படையின் காட்டு நடவடிக்கை படையணியின் உடையை போலிருப்பது தெரியும். செ.கஜேந்திரன் தவறான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதை தவிர்க்க வேண்டும்" என்றார்.

பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட எம்.பி, சுதர்சன் டெனிபிட்டிய எழுந்து, செ.கஜேந்திரனின் உரைக்கு ஆட்சேபம் தெரிவித்தார். கஜேந்திரனின் உரையில் பாலச்சந்திரன் குறித்து தெரிவிக்கப்பட்ட பகுதி கருத்துக்களை ஹன்சார்ட்டிலிருந்து நீக்க வேண்டும் என்றார்.

இதன்போது, பாராளுமன்ற அமர்வை தலைமைதாங்கிக் கொண்டிருந்த அங்கஜன் இராமநாதன், அது குறித்து தான் கவனம் செலுத்துவதாகவும், "செ.கஜேந்திரன் தனது கருத்தை மட்டுமே வெளிப்படுத்தினார்" என்றார். (ம-03)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்கு மைத்திரி என்னை அழைக்கவில்லை

## ஆணைக்குழுவில் ரணில் சாட்சியம்

2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தை தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு சபை கூட்டத்திற்கு தன்னை அழைக்கவில்லையென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முதல் தடவையாக சாட்சியமளிக்கும் போதே ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்தார்.

மேலும் 52 நாள் அரசாங்கத்தின் போது பிரதமராக இருந்த மகிந்த ராஜபசவைக் கூட பாதுகாப்பு சபைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

நேற்று அவருக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக சாட்சிய மளிப்பு பிற்போடப்பட்டதுடன் இது தொடர்பாக ஆராய்ந்த ஆணைக்குழு எதிர்வரும் 13 ஆம் திகதி ஆஜராகுமாறு ரணில் விக்கிரமசிங்கவிற்கு அறிவித்தது. (ம-03)

## மயங்கி விழுந்த யாழ். பல்கலை மாணவி

# கொரோனா சந்தேகத்தில் வைத்தியசாலையில் அனுமதி

(வவுனியா)

யாழ். பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாக மாணவி ஒருவர் நேற்று இரவு 7 மணியளவில் திடீரென மயங்கி விழுந் தமையால் கொரோனா பரிசோதனை க்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கம்பஹாவைச் சேர்ந்த குறித்த மாணவி யாழ். பல்கலைக் கழகத்தின் பம்பைமடு பகுதியில் உள்ள வவுனியா வளாகத்தில் கல்வி கற்று வருகின்றார்.

திடீரென மயங்கி விழுந்தமையால் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து வளாக மாணவர்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, அம்புலன்ஸ் வண்டியில் கொண்டு செல்லப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் குறித்த மாணவி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவிக்கு கொரோனா தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பிசிஆர் பரிசோதனைக்காக தனிமைப் படுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கம்பஹாவைச் சேர்ந்த மற்றும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணிய வவுனியா வளாக மாணவர்கள் 90 பேரிடம் நேற்று பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03.250)

## புங்குடுதீவு யுவதி...

தாரத்துறை அதிகாரி கள் தெரிவிக்கின்றனர். மீண்டும் 28ஆம் திகதி கம்பஹா திரும்பியுள்ளார்.

அதன் பின்னர் 3ஆம் திகதி மீண்டும் திரும்பி வந்துள்ளார். அவர் 3ஆம் திகதி திரும்பி வந்த பயண விபரமே, வடக்கு சுகாதார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

மீசாலையை சேர்ந்த ஒருவருடன் நடந்த திருமண நிச்சயதார்த்தத்தில் பலர் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கொரோனா தொற்று இல்லையென பரிசோதனை முடிவில் அறியப்பட்ட மற்றைய யுவதியின் பிறந்த தினம் கடந்த 30ஆம் திகதி கொண்டாடப்பட்டுள்ளது. அதில் இருநூறுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-03)

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்

தோற்றம்
10 . 01 . 1946



மறைவு
08 . 09 . 2020

கடந்த 08.09.2020 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

திருமதி சித்திரம் கந்தசாமி

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (08.10.2020) வியாழக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறப்பு நிகழ்வில் கலந்து கொண்டோர், துயர் பகிர்ந்தோர், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வழங்கியோர், வைத்திய உதவி வழங்கிய மருத்துவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-487)

மண்டான்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்
077 651 0358

கண்ணீர் அஞ்சலி



2020.10.06 ஆந் திகதி சிவபதமடைந்த
எமது கல்லூரியின் உயிரியல் ஆசிரியை
திருமதி கமலாவதி சுரேஸ்குமார் அவர்களின்
மாமியாரும் கல்லூரியின் பழைய மாணவர்
சங்கத்தின் பொருளாளர்
திரு. சின்னத்துரை சுரேஸ்குமார்
அவர்களின் தாயாருமாகிய

திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின்
குடும்பத்தவர்களுக்கு ஆறுதலையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

(4394)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

கண்ணீர்க் காணிக்கை



எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொருளாளர்
திரு. சின்னத்துரை சுரேஸ்குமார் அவர்களின் தாயாரும்
பழைய மாணவர் சங்க உறுப்பினரும்
கல்லூரியின் ஆசிரியையுமான
திருமதி கமலாவதி சுரேஸ்குமார் அவர்களின்
மாமியாருமாகிய

திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(4395)

பழைய மாணவர் சங்கம்
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## கொரோனாவைக் கட்டுப்படுத்தும்

# அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்க்கட்சி பூரண ஒத்துழைப்பு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துவரும் அனைத்து செயற்பாடுகளுக்கும் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

கொரோனா வைரஸ் பரவலை அரசாங்கம் கட்டுப்படுத்தியுள்ளது என்று நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனால் தற்போது சமூகப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் எடுக்கும் அனைத்து தீர்மானங்களுக்கும் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்போம்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரே மாதத்திற்குள் நாட்டின் பொருளாதாரம் மறை பெறுமானத்தை பெற்றிருந்தது. இது கொரோனா வைரஸ் பரவலுக்கும் முன்னர் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியாகும். அரசாங்கத்தின் முறையற்ற வரிக்குறைப்பின் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது.

வைரஸ் பரவலின் பின்னர் இந்த நிலைமை மேலும் அதிகரித்தது. தற்போது நாட்டு மக்கள் இருவேளை உணவுகளை பெற்றுக் கொள்ளவே முடியாமல் இருக்கின்றனர்.


நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில், வைரஸ் பரவல் காரணமாக பலரது தொழில்வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது.

இந்நிலையில் தற்போது அத்தியாவசிய பொருட்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது. அதற்கமைய போதிய வருமானமின்றி பொருட்களின் விலையும் அதிகரித்துள்ள நிலையில் மக்கள் எவ்வாறு உயிர் வாழ்வார்கள்? அரிசி மற்றும் தேங்காயின் விலைகள் ஒரு காலத்தில் அதிகரித்தாலும் இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள் அதனை முறையாக கையாண்டிருந்தன.

ஆனால் தற்போதைய அரசாங்கத்திற்கு அதனை கையாளத் தெரியவில்லை என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# றிசாத் பதியுதீனின் சகோதரனின் விடுதலைக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் இடமாற்றத்திற்கும் தொடர்பு

## கெஹலிய தகவல்



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீனின் சகோதரர் விடுதலை செய்யப்பட்டமையினாலேயே குற்றப்புலனாய்வுப் பிரிவின் பிரதானி பிரதிப் பொலிஸ்மா அதிபர் நுவன் வெதசிங்க இடமாற்றம் செய்யப்பட்டிருக்கலாம் என்று அரசாங்கத்தின் ஊடகப்பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

**கேள்வி :** குற்றப்புலனாய்வுப் பிரிவின் பிரதானி பிரதிப் பொலிஸ்மா அதிபர் நுவன் வெதசிங்க இடமாற்றம் செய்யப்பட்டார். இவர் இடமாற்றம் செய்யப்பட்ட சம்பவம் பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீனின் சகோதரர் விடுதலை செய்யப்பட்ட சம்பவத்துடனேயே நேரடியாகத் தொடர்புபடுகின்றது.

எனவே உண்மையில் இந்த இடமாற்றத்திற்கான காரணம் என்ன? இது விடயத்தில் ஜனாதிபதியினால் ஏதேனும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதா?

**பதில் :** இது நிர்வாக ரீதியில் மேற்கொள்ளப்பட்டதொரு தீர்மானமாகும். நீங்கள் கூறுவதைப்போன்று றிசாத் பதியுதீனின் சகோதரர் விடுதலை செய்யப்பட்ட விவகாரத்துடன் தொடர்புடைய விதமாகவே இந்த இடமாற்றம் இடம்பெற்றிருக்கலாம் என்று கருதுகிறேன். ஏனென்றால் அண்மையில் அது குறித்தே அதிகளவில் பேசப்பட்டது. இது முற்றுமுழுதாக பொலிஸ் நிர்வாகம் மற்றும் சட்டம் ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரச்சினையாகும்.

**கேள்வி:** கடந்த அரசாங்கம் குற்றப்புலனாய்வுப்பிரிவின் அதிகாரிகளைப் பயன்படுத்தியே பல்வேறு நபர்கள் மீதும் வழக்குகளைத் தொடுத்தது என்று நீங்கள் குற்றஞ்சாட்டினீர்கள். அவ்வாறெனில் தற்போது இவ்விடயத்திலும் பாரிய சிக்கல் இருக்கிறதல்லவா? றிசாத்தின் சகோதரர் பல மாதகாலமாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு திடீரென்று விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார் அல்லவா?

**பதில் :** "கடந்த காலத்தில் இடம்பெற்றதைப் போன்று எவரையேனும் தன்னிச்சையாகக் கைது செய்வதற்கோ அல்லது விடுதலை செய்வதற்கோ ஏற்ற வகையிலான அதிகாரங்களை அரசியல்வாதிகளுக்கு வழங்குவதற்கு நான் தயாரில்லை.

எனவே இது விடயத்தில் உரிய விசாரணைகளின் பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஜனாதிபதி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறார். எனவே இது விடயத்தில் சட்டத்தின் பிரகாரம் உரியவாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமையினால் இந்த இடமாற்றம் இடம்பெற்றிருக்கக்கூடும் என்றார். (ஜ-4)

# கடந்த ஒன்பது மாதங்களில் மாத்திரம் 6 ஆயிரத்து 63 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

## கல்வி அமைச்சு தகவல்

(கொழும்பு)

இந்த வருடத்தில் செப்டெம்பர் மாதம் வரை 6 ஆயிரத்து 63 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதில் 3 ஆயிரத்து 900 முறைப்பாடுகளின் விசாரணை நிறைவு பெற்றுள்ளதுடன் 330 முறைப்பாடுகளுக்கு குற்றப்பத்திரம் தாக்கல் செய்துள்ளதாக கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் ஹரினி பாலசூரியவினால் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக வினவப்பட்டிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து பதிலளிக்கையில், 2020 ஜனவரி முதலாம் திகதி முதல் செப்டெம்பர் 23 ஆம் திகதி வரை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு சிறுவர் துஷபிரயோகம் தொடர்பாக 6 ஆயிரத்து 63 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.



அம்முறைப்பாடுகளில் 3 ஆயிரத்து 900 விசாரணைகள் நிறைவு பெற்றிருக்கின்றதுடன் விசாரணை நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 330 முறைப்பாடுகளுக்கு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இது போதுமானதாக இல்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

அதனால் விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்த 9 மாகாணங்களுக்கும் 9 சிறுவர் நீதிமன்றங்களை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

தற்போது பத்தரமுல்ல மற்றும் யாழ்ப்பாணத்தில் மாத்திரமே சிறுவர் நீதிமன்றம் இருக்கின்றன. அதேபோன்று சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளை விசாரணை செய்யும் பொலிஸாருக்கு முறையான பயிற்சி வழங்கவும் பொலிஸ் நிலையங்களுக்கு வரும் முறைப்பாடுகளில் ஆரம்ப விசாரணையை 24 மணி நேரத்தில் விசாரித்து அதிகார சபைக்கு அறிக்கையிடவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# அதிகாரிகள் இன,மத அடிப்படையில் செயற்படுவதை அனுமதிக்கமாட்டோம்

## விதுர திட்டவட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் எந்தவொரு திணைக்களமோ அரச அதிகாரிகளோ இன, மத அடிப்படையில் பக்கச்சார்பாக செயற்படுவதை அனுமதிக்க முடியாது என புத்தசாசன சமய மற்றும் கலாசார இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது வடமாகாண தொல் பொருள் திணைக்களத்தினர் இன,மத ரீதியாகச் செயற்படுகின்றனர். கூட்டங்களில் பங்கேற்க அவர்கள் மறுக்கின்றனர்.

அத்துடன் தமிழர்களின் கலாசாரங்களை சிங்கள, பௌத்தர்களின் கலாசாரமாக மாற்றும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றமை தொடர்பில் புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சரிடம் பாராளுமன்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது அமைச்சின் கீழ் தொல்பொருள் திணைக்களம் இல்லை. அது ஜனாதிபதியின் பாதுகாப்பு அமைச்சுக்கு கீழேயே உள்ளது.

எனினும் அரச திணைக்களமொன்று இன,மத ரீதியாக செயற்பட முடியாது. அதனை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என தெரிவித்தார். (ஜ-4)

# ஜனவரி மாதம் முதல் சமூகத்திற்குள் இருந்த கொரோனா தற்போது தீவிரம் பெற்றுள்ளது - வைத்தியர் ஜெயருவான்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் கடந்த சில மாதங்களாகவே சமூகத்துக்குள் உள்ளது. இப்போது அதன் பரவல் ஆபத்து அதிகரித்துள்ளது என்று இலங்கையின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்ட கொத்து தொற்றுக்களுக்குப் புறம்பாக கடந்த சில மாதங்களாகவே கொரோனா வைரஸ் சமூகத்தில் உள்ளது என இலங்கையின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் டாக்டர் ஜெயருவான் பண்டார தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி முதல் இப்போதுவரை இந்த வைரஸ் சமூகத்திற்குள் இருந்து கொண்டே வந்துள்ளது.

சமூகத்தில் ஏற்கனவே நோயாளிகள் இல்லை என்றால் இரண்டு மாதங்களின் பின்னர் தொற்று நோயாளி ஒருவர் கம்பஹாவில் கண்டறியப்படுவது சாத்தியம் இல்லை எனவும் அவர் கூறினார்.


தற்போது தொற்று நோய் பரவல் அதிகரித்துள்ள நிலையில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். சுகாதார-பாதுகாப்பு வழிகாட்டல்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

புதிதாகக் கண்டறியப்பட்ட நோயாளிகள் அல்லது அவர்களின் தொடர்புகள் எங்கள் சூழலுக்கு உள்ளதா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்த முடியாது. எனவே மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.


கம்பஹா ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய 331 பேர் இதுவரை தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டு மக்கள் அனைவரும் நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் முதன்முதலில் பின்பற்றியவாறு இறுக்கமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குத் திரும்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)



நாவாந்துறை வசந்தபுரம் வீட்டுத்திட்டங்களுக்கான மீதிப்பணம் வழங்கும் செயற்றிட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் சதாசிவம் இராமநாதனால் வசந்தபுரம் நாவாந்துறை அண்ணா சனசமூக நிலையத்தில் மீதிப் பணம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.



ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர்டெனிஸ் சைபி மரியாதையின் நிமித்தம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் சந்தித்தார். பாராளுமன்றத்தில் நடை பெற்ற இச்சந்திப்பில் அரசியல் தூதுவருடன் வர்த்தகம் மற்றும் தொடர்பாடல் துறைக்கான பிரதித் தலைவர் திருமதி. அன்னே வாகியர் சட்டர்ஜியும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் திரு. தம்மிக்க தஸநாயக்கவும் இச்சந்திப்பில் இணைந்துகொண்டிருந்தார்.

# கொரோனா அச்சத்திற்கு மத்தியிலும் 100 மதுபானப் போத்தல்களுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -சங்கத்தானைப்பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் 100 சிறிய மதுபானப் போத்தல்களுடன் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் மதுபானப் போத்தல்களை கொண்டு செல்வதாக சாவகச்சேரி குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலினை அடுத்து இக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா அபாயநிலை காரணமாக நாட்டில் மக்கள் அத்தியாவசியப் பொருட்களுக்கு முண்டியடிக்கும் நிலையில் விற்பனை நோக்கோடு அளவுக்கு அதிகமான மதுபானப் போத்தல்களைக் கொண்டு சென்ற நபர் ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான முயற்சிகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-4-30)

# ஆடு, மாடுகளை களவாடிய குற்றச்சாட்டில் 5 பேர் கைது

(குருமன்காடு)

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆடு, மாடுகளை களவாடிய 5 இளைஞர்களை வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

பண்டாரிக்குளம் பகுதியில் மாடொன்றும் மகாறம்பைக்குளம் பகுதியில் பெரிய இன ஆடு ஒன்றும் காணாமல் போன நிலையில் அவற்றின் உரிமையாளரினால் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சுனில் சாந்தவின் வழிகாட்டலில் அமைக்கப்பட்ட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில், தேக்கவத்தை பகுதியிலுள்ள வீடொன்றில் சட்டவிரோதமாக மாட்டினை வெட்டிய குற்றச்சாட்டில் அதே பகுதியினை சேர்ந்த 21, 22 வயதுடைய இரு இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் மகாறம்பைக்குளத்தில் பெரிய இன ஆட்டினை விற்பனை செய்த சமயத்தில் மகாறம்பைக்குளம் பகுதியில் வைத்து அதே பகுதியினை சேர்ந்த 27, 28, 29 ஆகிய வயதுகளை சேர்ந்த மூன்று இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மாட்டின் இறைச்சி மற்றும் ஆடு ஆகியவற்றினையும் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களையும் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை வவுனியா குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-250)

# கலாதீபம் சஞ்சிகை வெளியீடு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கலாதீபம் மின் சஞ்சிகையின் (e Magazine) முதலாவது இதழ் நேற்று முன்தினம் கலாசாலையில் இடம்பெற்ற ஆசிரியர் தின விழாவின் பொழுது வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் வி. எஸ். குணசீலன் மின் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். (ஜ-4)





இலங்கை பொறியியலாளர் சங்க கிளிநொச்சி மாவட்ட பிரிவும் வடமாகாண தொழில்முறை சார் தலைமைத்துவ மேம்பாட்டு நிறுவனம் முல்லைத்தீவு மாவட்ட செயலக மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு பிரிவு இணைந்து ஏற்பாடு செய்த வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கான மென்திறன் மேம்பாட்டு செயலமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இலங்கை பொறியியலாளர் சங்க கிளிநொச்சி மாவட்ட பிரிவும் வடமாகாண தொழில்முறை சார் தலைமைத்துவ மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் தலைவர் என்.சுதாகரன் தலைமையில் இடம்பெற்றது.

# புலஸ்தினி உயிருடன் இருப்பதாக தகவல் வழங்கியவருக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

சாய்ந்தமருது தற்கொலை தாக்குதலில் சம்பந்தப்பட்டவர் எனக் கூறப்படும் சாரா என்ற புலஸ்தினி உயிருடன் இருப்பதாகவும் தான் அவரை கண்டதாக தகவல் வழங்கிய நபருக்கு இனந்தெரியாதவர்கள் அச்சுறுத்தல் விடுப்பதாக கல்முனை நீதிமன்ற நீதவானின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது தற்கொலை தாக்குதலில் கொல்லப்பட்டதாக கூறப்படும் 16 பேரின் உடற்பாகங்களையும் குடும்ப உறுப்பினர்களின் மரபணு பரிசோதனை அறிக்கைகளை கொண்டு பகுப்பாய்வு செய்ததில் சந்தேகத்திற்கிடமாக தேடப்படும் சாரா எனப்படும் புலஸ்தினி மகேந்திரன் என்பவரின் மரபணு பரிசோதனை அறிக்கை (DNA) பொருந்தவில்லை என மன்றில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர் தப்பி சென்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு விசாரணையைத் தொடர்ந்து தற்கொலை குண்டுத்தாக்குதல் இடம்பெற்று சில தினங்களுக்கு பின்னர் மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் எல்லைக்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் சாரா என்றழைக்கப்படும் புலஸ்தினி என்பவரை கண்டதாக 43 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் பாதுகாப்பு தரப்பினரிடம் தகவல் ஒன்றினை வழங்கி இருந்தார்.

இவ்வாறு தகவல் வழங்கிய குறித்த நபருக்கு தற்போது இனந்தெரியாதோரினால் தொலைபேசி ஊடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக சட்டத்தரணி ஒருவர் ஊடாக ஒக்டோபர் மாதம் கல்முனை நீதிமன்ற நீதவான் ஐ.என். றிஸ்வான் முன்னிலையில் தனக்கு நிகழ்ந்த அச்சுறுத்தல் விடயமாக நீதவானுக்கு மூடிய அறையில் வாக்கு மூலம் ஒன்றினை வழங்கி இருந்தார்.

இதற்கமைய குறித்த விடயத்தை விசாரணை செய்த நீதவான் மேலதிக நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்காக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார்.

இதேவேளை சஹ்ரான் ஹாசீமுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட 12 சந்தேக நபர்களை மீண்டும் ஒக்டோபர் மாதம் 19 ஆம் ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்று உத்தரவிட்டது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டம் கல்முனை நீதிமன்ற நீதவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் இரு வேறு சந்தர்ப்பங்களில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டபோது காணொளி ஊடாக சந்தேக நபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து குறித்த 12 சந்தேக நபர்களையும் மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த விசாரணையின் போது மேலதிக அறிக்கைகள் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்டு மீண்டும் சந்தேக நபர்கள் விசாரணைக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மேலும் மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் வைத்து கடந்த வருடம் மேற்குறித்த 12 சந்தேக நபர்களும் கைதாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் 92 ஆவது பிறந்த தின நிகழ்வு இ.சிவகுரு தலைமையில் சாந்தை பண்டத்தரிப்பில் கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர் த.தர்மகுலசிங்கம் கலந்துகொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்தார்.

## குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பொதுமக்களுக்கான சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம்!

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பொதுமக்கள் சேவைகள் இன்று 7 ஆம் திகதி தொடக்கம் நாளை மறுதினம் 9 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும், கொவிட்-19 வைரஸ் தொற்று நோய் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கையாக, குடிவரவு. குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் பொதுமக்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தருவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ஜ-4)

# மரண அறிவித்தல்

## திருமதி.பார்வதிதேவி சதாசிவம்



யாழ். வடமராட்சி புலோலி மேற்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், லண்டனை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட பார்வதிதேவி சதாசிவம் அவர்கள் 29-09-2020 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முருகேசு கணபதிப்பிள்ளை, சிவபாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கதிர்காமு, அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும்,கதிர்காமு சதாசிவம் அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்ற முரளிதரன்(ஆனந்தன்), சத்தியா, சத்தியராணி, சத்தியசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிருந்தா, காலஞ்சென்ற சத்தியா ஆகியோரின் அன்பு மாமியாரும், கமலாம்பிகை, சீதாதேவி, சுப்பிரமணியம்(சிங்கப்பூர்), காலஞ்சென்ற மயில்வாகனம், இலக்குமிதேவி, உருக்குமணிதேவி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுவீகா (ஆனந்தி), துஷேத், நிஷேத், கிஷேத், மௌசிகா, வர்ஷகா, றித்திக்கா, ஹிருத்திக் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை 07.10.2020 லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### நிகழ்வுகள் நேரடி ஒளிபரப்பு



- 7th Oct 2020 11:00 AM

கிரியை Get Direction
- Wednesday, 07 Oct 2020 10:00 AM - 12:00 PM
- Angel Funeral Care188 Alexandra Ave, Harrow HA2 9BN, UK

பார்வைக்கு Get Direction
- Wednesday, 07 Oct 2020 12:00 PM - 2:00 PM
- Angel Funeral Care188 Alexandra Ave, Harrow HA2 9BN, UK

தகனம் Get Direction
- Wednesday, 07 Oct 2020 3:00 PM
- Hendon crematorium Holders Hill Rd, London NW7 1ND, United Kingdom
- SOUTH CHAPPEL

(c-488)

தொடர்புகளுக்கு:-

கமலாம்பிகை - சகோதரி
Phone : +94212264758


சத்தியா - மகள்
Mobile : +447741414328

சத்தியசீலன் - மகன்
Mobile : +447861238514

தகவல்
குடும்பத்தினர்.

# பெரும்பான்மையினர் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்மானங்கள் சிறுபான்மையினரைப் பாதிக்காது இருக்க வேண்டும்

## இதுவே ஜனநாயகம் என்கிறார் மகிந்த தேசப்பிரிய



(நெளுக்குளம்)

**பெரும்பான்மையினர் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்மானங்கள் தான் ஜனநாயகம் என்று பலர் நினைக்கிறார்கள். சிறுபான்மையினருக்கு எவ்விதமான பாதிப்பும் நிகழாத விதத்தில் பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கு இணங்க ஏற்படுத்தப்படும் ஜன நாயகமே உண்மையான ஜனநாயகம் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

வவுனியாவிற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அவர் இளைஞர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனநாயகத்திற்கு இளைஞர்கள் தேவை, இளைஞர்களிற்கு ஜனநாயகம் தேவை. தற்போது ஜனநாயகத்தை பற்றி பேசுபவர்கள் எங்களைப் போன்ற வயது முதிர்ந்தவர்களாகவும் அல்லது காலாவதியானவர்களாகவுமே இருக்கின்றனர். அதைப் பற்றி பேசுவதற்கு தேவையானவர்கள் இளைஞர்களே.

இயேசுவும், நபியும், புத்தனும் இளைஞர்களாக இருந்த போதே தமது சமயப்பணிகளை மேற்கொண்டனர். இந்து மதத்திலும் அவ்வாறு இருக்கிறது. இப்படியிருக்கும்போது இளைஞர்களினால் ஒன்றும் செய்ய முடியாது என்று எப்படி நாங்கள் கூறமுடியும்.

உங்களது இதயத்தில் ஜனநாயகம்,சமத்துவம் தொடர்பாக தீப்பொறி ஒன்று எரிந்துகொண்டே இருக்கும். அவை ஒன்றிணைந்து எரிமலை சுவாலையாகும். அது வன்முறை எரிமலையாக மாறக்கூடாது.

பெரும்பான்மையினர் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்மானங்கள் தான் ஜனநாயகம் என்று பலர் நினைக்கிறார்கள். உண்மையான ஜனநாயகம் என்பது சிறுபான்மையினருக்கு எவ்விதமான பாதிப்பும் நிகழாத விதத்தில் பெருந்தொகையானவர்களின் விருப்பத்திற்கு இணங்க ஏற்படுத்தப்படும் ஜனநாயகமே உண்மையான ஜனநாயகம். ஆட்சியில் மாத்திரமல்ல சாதாரணமாக ஒரு மரணச் சடங்குகளில் கூட பெரும்பான்மையினர் சிறுபான்மையினரது உரிமைகளை நசுக்கி செயற்படும் விதத்தினை நாம் காண்கின்றோம்.

பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கேற்ப ஆட்சி நடைபெறவேண்டும் என்பதை கருத்தில் கொண்டிருப்பதே மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பெரும் தடைக்கல்லாக அமைந்திருப்பதுடன், அந்த நாடுகள் முன்னேற முடியாமல் தவிப்பதற்கும் காரணமாகின்றது.

உதாரணமாக 5 பேரைக் கொண்ட குடும்பத்தில் மூவர் சோற்றையும், இருவர் பாணையும் விரும்பி உண்பவர்களாக இருப்பர். அங்கு நாம் தேர்தலை நடத்தினால் சோற்றினை விரும்புவர்களே வெற்றி பெறுவர்.

ஆனால் பாண் உணவை விரும்பி உண்பவர்களின் விருப்பம் அங்கு மறுதலிக்கப்படுகின்றது. ஆதலால் தேர்தலின் மூலம் மாத்திரம் ஜனநாயகத்தை தேர்ந்தெடுக்க முடியாது. எனவே சிறுபான்மையினருக்கு எவ்விதமான பாதிப்பும் நிகழாத விதத்தில் பெருந்தொகையானவர்களின் விருப்பமே உண்மையான ஜனநாயகம் எனலாம்.

அதுபோல மொழியையும் அதற்கு உதாரணமாக எடுக்க முடியாது.15 சதவீதமாக தமிழர்கள் வசிக்கும் இரத்தினபுரியில் சிங்களத்தில் மாத்திரம் சுற்றுநிருபங்களை அனுப்புவதும் அதுபோல, சிறுதொகையினராக உள்ள முல்லைத்தீவு வெலிஓயாவில் வசிக்கும் சிங்கள மக்களுக்கு தமிழில் கடிதங்களை அனுப்புவதும் சரியாகாது.

எனவே நாம் ஆற்றும் ஒவ்வொரு பணியும் இரகசியமாகவும், அந்தரங்கமாகவும் இல்லாமல் பகிரங்கமாகவும், வெளிப்படையாகவும் இருக்கவேண்டும். எமது கருத்துக்களில் பல்லினத்தன்மை இருக்க வேண்டும். இதற்காகவே தேர்தல் திணைக்களத்திற்கு பதிலாக தேர்தல் ஆணைக்குழு நிறுவப்பட்டது.

அதன்மூலம் தனி நபரது கருத்துக்கு பதிலாக மூன்று பேர் கொண்ட அங்கத்தவர் குழு நியமிக்கப்பட்டது. பல் வேறு பட்டவர்கள் இருக்கும் போதே பல கருத்துக்கள் வரும். ஒரு வர்ணத்தினால் தீட்டப் படும் ஓவியம் ஒருபோதும் அழ காக இருக்காது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4-299)

## மத்திய பேருந்து நிலையத்தில் தொற்று நீக்கல் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸார் யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார பிரிவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண நகரப் பகுதி மற்றும் மத்திய பேருந்து நிலையம், தனியார் பேருந்து தரிப்பிடம், யாழ்.நகர வர்த்தக நிலையங்களிற்கு கிருமித்தொற்று நீக்கி மருந்து விசிறும் பணி முன்னெடுக்கப்பட்டது.



கொரோனாஇரண்டாம்அலை ஆரம்பமாகியுள்ள நிலையில் புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த இருவரில் ஒருவருக்கு மினுவாங்கொடை பகுதியில் இருந்து வந்த வேளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனையின் போது கொவிட்-19 தொற்று உறுதியாகியுள்ள நிலையில் யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்தில் கிருமி நீக்கும் நடவடிக்கை நேற்று இடம்பெற்றது.சுகாதார தரப்பினருடன் யாழ்ப்பாணம் பொலிஸார் மற்றும் மாநகர சபையினர் இணைந்து இந்த கிருமி நீக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர். (நி-4)

## வடக்கு கடற்பரப்பில் கடலட்டை பிடிக்கத் தடை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பதற்கு தற்காலிக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை கூட்டம் நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் குறித்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது நாட்



டில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பல்வேறு கட்டுப்பாடுகள் சுகாதார தரப்பினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய தொழில் நடவடிக்கைகளும் இலங்கையின் வடபகுதி மக்களிடையே கொரோனா அச்சத்தை அதிகரித்துள்ளது.

அத்துடன் அண்மையில் எல்லைதாண்டி தொழிலில் ஈடுபட்ட இந்திய கடற்றொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணியதால் மன்னார் பகுதியைச் சேர்ந்த 79 கடற்றொழிலாளர்கள் அடையாளம் காணப்பட்டு சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இவர்களில் 7 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுமுள்ளனர்.

இந்நிலையில் கொரோனா தொடர்பிலான தற்போதைய நாட்டின் அசாதாரண நிலைமைகளை கருத்திற் கொண்டு அமைச்சரவையில் ஆராயப்பட்டு கடலட்டை பிடிப்பதற்கு தற்காலிகமாக தடையை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதியளித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## மாரி காலத்திற்கு முன் வீதி புனரமைக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மிக முக்கியமான அதிக தேவைப்பாடு உடைய சேதமடைந்த வீதிகளை வருகின்ற மாரி காலத்திற்கு முன்னர் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சாவகச்சேரி-தபால்கந்தோர் வீதிச் சந்தி,பெருங்குளம் பிள்ளையார் வீதிச் சந்தி,சாவகச்சேரி மகளிர் கல்லூரிச் சந்தி மற்றும் ஹென்சன் வீதிச் சந்தி உள்ளிட்ட முக்கிய சந்திகளில் வீதி சேதமடைந்து மாரி காலத்தில் மழை நீர் தேங்கி நிற்கின்றது.

இதனால் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே சாவகச்சேரி நகரசபையினர் உரிய திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு நீர்தேங்கி நிற்கும் சேதமடைந்த அதிக தேவைப்பாடு உடைய வீதிகளை உடனடியாக புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மேலும் அவர் தெரிவித்திருந்தார். (நி-4-30)

# சீனக்குடா எண்ணெய் தாங்கிகளை பெற்றுக்கொள்ள இந்திய தரப்புடன் பேச்சுவார்த்தை-உதய கம்மன்பில

(கொழும்பு)

திருகோணமலை சீனக்குடா எண்ணெய் தாங்கிகளை இந்தியாவிடம் இருந்து பெற்றுக்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் இருதரப்பு உடன்படிக்கைகளை ஒரு தரப்பினருக்கு சாதகமாக மாற்றியமைக்க முடியாது.

எனினும் இந்தியா பயன்படுத்தும் எண்ணெய் குதங்களை தவிர்ந்து ஏனைய எண்ணெய் குதங்களை பெற்றுக்கொள்ள இந்திய அரசாங்கத்துடனும், இந்திய எண்ணெய் நிறுவனத்துடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சர் உதய கம்மன்பில சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷா விதானகே, திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இந்தியாவிடம் இருந்து மீண்டும் பெற்றுக்கொள்வது குறித்த நகர்வுகள் தொடர்பில் சபையில் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் தெரிவிக்கும் போதே அமைச்சர் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், திருகோணமலை சீனக்குடாவில் அமைந்துள்ள எண்ணெய் குதங்களை நாம் இந்தியாவிற்கு கொடுக்கவில்லை, ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் 2003 ஆம் ஆண்டு இந்த தாங்கிகளை நீண்டகால குத்தகைக்கு வழங்கினர். இதில் சகல எண்ணெய் தாங்கிகளையும் 75 வீத பங்கு இந்தியாவிற்கும், 25 வீத பங்கு இலங்கைக்கும் இருக்குமாறு இலங்கை-இந்திய கூட்டு எண்ணெய் நிறுவனம் ஒன்றுக்கு 35 ஆண்டுகால குத்தகைக்கு கொடுத்துள்ளனர்.

17 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த எண்ணெய் தாங்கிகளை இந்தியா பெற்றுக்கொண்டாலும் இவற்றில் சகல எண்ணெழ் தாங்கிகளையும் இந்தியா பயன்படுத்தவில்லை. 104 எண்ணெய் குதங்கள் வழங்கப்பட்டன. அதில் 99 குதங்கள் பாவனைக்கு உரியதாக உள்ளது. இவற்றிலும் 15 எண்ணெய் தாங்கிகளை மட்டுமே இந்தியா பயன்படுத்தி வருகின்றது.

எனவே ஏனையவற்றை நாம் எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது குறித்து, குறித்த எண்ணெய் நிறுவனத்துடனும் இந்திய அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் முடிந்த பின்னர் இது குறித்து முழுமையான தகவல்களை வழங்க முடியும். இரு தரப்பு உடன்படிக்கையை ஒரு தரப்பினருக்கு சாதகமாக மாற்றியமைக்க முடியாது.

அது கடினமானது, எனினும் பாவனையில் இல்லாத சகல எண்ணெய் குதங்களையும் எமது பயன்பாட்டிற்காக பெற்றுக்கொள்ள பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனை பெற்று வேறு யாருக்கும் வழங்க எந்த நோக்கமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## கொரோனா தொடர்பில் விசேட செயலணி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட கொவிட்-19 விசேட செயலணி நேற்று மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் ஜே.எஸ்.டி.எம். அசங்க அபேவர்தன தலைமையில் நடைபெற்றது.

தற்போது கொவிட்-19 தொற்றாளர்கள் நாட்டில் சமூகத்தில் இருந்து அடையாளங் காணப்பட்டதனை தொடர்ந்து மாவட்டத்தில் முன்பாதுகாப்பு நடவடிக்கையாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டது. (ஜ-4)


## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் மற்றும் நெல்லியடியில் உள்ள எமது பல் வைத்தியசாலையில் பணிபுரிய பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்புக்கு: 0773345395, 0759759827, 0759759824

(4389)


# தூர இடங்களுக்கான பேருந்து சேவைகள் இடம்பெறும்

(கொழும்பு)

ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களின் ஊடாகவும் தூர இடங்களுக்கான பேருந்து சேவைகள் இடம்பெறும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும் குறித்த பகுதிகளில் பயணிகளை ஏற்றி இறக்குவதற்கு அனுமதி இல்லையென அப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட திவுலப்பிட்டிய, மினுவாங்கொட மற்றும் வெயாங்கொட பகுதிகளில் ஊரடங்கு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)





கம்பஹா மாவட்டத்தில் மூன்றாவது நாளாகவும் 3 இடங்களில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அங்குள்ள பிரதேசங்கள் மற்றும் வீதிகள் வெறிச்சோடி காணப்பட்டன.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 40.5 செவ் 5 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: B.Sc Engineering Process Engineer (private)
எதிர்பார்ப்பு: பட்டதாரி பெண்
தொ.இ: B/11270

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா: 5 ¼ சூரி,செவ் 10 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: I.E.S.L. Graduate Engineer, Engineer Assistant (Gov)
எதிர்பார்ப்பு: பட்டதாரி. அரச, தனியார் வங்கி உத்தியோகத்தர்.
தொ.இ: B/11273

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா: 50 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: CIMA partially Qualified. Executive Accountant (private)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/11276

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: செவ் 3 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சுவிஸில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: படித்த பெண், சுவிஸ் விரும்பத்தக்கது.
தொ.இ: B/11277

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 34 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியை
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகமுள்ள மணமகன்
தொ.இ: G/384

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா: 16 ¾ சூரி,செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் உள்ள மணமகன்
தொ.இ: G/463

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: செவ் 6 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: பட்டதாரி நிகழ்ச்சி திட்டமிடல் அதிகாரி
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகத்தர்
தொ.இ: G/475

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா: 31 ½ செவ் 9 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: வெளிவாரி பட்டதாரி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகத்தர்
தொ.இ: G/499

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சங்கிலி அறுத்த சகோதரர்கள் கைது

(குருமன்காடு)

வவுனியா சமயபுரம் பகுதியில் மூதாட்டியின் சங்கிலியை அறுத்த குற்றச்சாட்டில் இரு சகோதர்களை வவுனியா பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

சமயபுரம் பகுதியில் சிறிய கடை ஒன்றினை நடத்தி வந்த மூதாட்டியிடம் இரு இளைஞர்கள் சென்று வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் வகையில் செயற்பட்டு மூதாட்டி அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்து தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் மூதாட்டி வவுனியா குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு மேற்கொண்டதனையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மகாறம்பைக்குளம் பகுதியினை சேர்ந்த 20,22 ஆகிய வயதுடைய சகோதரர்களை கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் குறித்த மூதாட்டியின் சங்கிலியையும் மீட்டெடுத்தனர். கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-4-250)

# வற்றாப்பளை கமக்கார அமைப்பிற்கு முதற்கட்ட உரமானியம் வழங்கி வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - முள்ளியவளை கமநலசேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட வற்றாப்பளை கமக்கார அமைப்பிற்கு பெரும்போகத்திற்கான உரமானியம் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக கமநலசேவைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.சுகந்தன் தெரிவித்துள்ளார்.

முள்ளியவளை கமநல சேவை நிலையத்தில் நேற்று முன்தினம் குறித்த உரமானியங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், முள்ளியவளை கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் இம்முறை 5000 ஏக்கருக்குமேல் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் 2000 ஏக்கருக்குரிய உரமானியம் தற்போது எம்மிடம் களஞ்சியப்படுத்தலில் உள்ளது. அந்த வகையில் பெரும்போக நெற்செய்கைக்கான உரமானியத்தினை முதற்கட்டமாக வற்றாப்பளை கமக்கார அமைப்பிற்கு வழங்கியிருக்கின்றோம்.

தொடர்ச்சியாக ஏனைய கமக்கார அமைப்புகளுக்கும் உரமானியம் வழங்குவதற்குரிய செயற்பாட்டினை துரிதமாக மேற்கொள்ளவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# வவுனியாவில் குடும்பமொன்று தனிமைப்படுத்தலில்

(நெளுக்குளம்)

வவுனியா தோணிக்கல் ஆலடிப்பகுதியில் வசிக்கும் குடும்பமொன்றினை அண்மையில் சந்தித்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து அக்குடும்பம் வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா ஆலடிப்பகுதியில் வசிக்கும் குடும்பமொன்றினை அண்மையில் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்ணொருவர் சந்தித்து சென்றுள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து அவர் வவுனியாவில் சந்தித்த குடும்பத்தினரை தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொலிஸார் குறித்த பகுதிக்கு மக்களை செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

தோணிக்கல் ஆலடிப் பகுதியில் புகையிரதக் கடவைக்கு அருகாமையில் சிறிய கடையொன்றினை நடத்தி வரும் குடும்பமொன்றே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது டன் அவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4-299)

# பாரம்பரிய மீன்பிடி முறைகளில் இருந்து நவீன முறைமைகளுக்கு மாறுவதன் மூலமே முன்னேற முடியும்

## அருட்தந்தை ஜெயக்குமார்

(முறிகண்டி)



பாரம்பரிய மீன்பிடி முறைகளிலிருந்து நவீன மீன்பிடி முறைக்கு மாறுவதன் மூலமே பொருளாதார ரீதியில் முன்னேற முடியும் என பூநகரி பங்குத் தந்தை கே.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

பூநகரியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கியூடெக் கரிதாஸ் நிறுவனத்தினால் மீனவர்களிற்கான மீன்பிடி வலை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் பரவலாக பேசப்படுகின்றது. இந்திய இழுவைப்படகுகளினால் பாரிய பாதிப்புக்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்விடயம் தொடர்பில் பல்வேறு பேச்சுக்கள் இரு அரசதரப்புக்குமிடையில் இடம்பெறும் உள்ளது. ஆனால்அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. காரணம் அங்குள்ள மீனவர்கள் தமது எல்லைப்பகுதியில் உள்ள வளங்களை அழித்து விட்டனர்.

அதனால் தற்போது மீன் உள்ள இடங்களை நோக்கி விரைகின்றனர். இங்குள்ள வளங்களை தேடி வரும் அவர்கள் அவ்வளங்களையும் அழிக்கப் போகின்றனர்.

ஆனால் இங்குள்ள மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடி முறைகளையே மேற்கொள்கின்றனர். சிறிய வள்ளங்களை கொண்டு மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். முன்னைய காலத்தில் இந்திய மீனவர்களும் இவ்வாறான முறைகளையே கையாண்டனர்.

ஆனால் தற்போது நவீன முறைகளை கையாள்வதால் அவர்கள் வாழ்வாதாரத்தில் முன்னேறியுள்ளனர். ஆனால் இங்கு உள்ள நீங்கள் அந்த முறைகளிற்கு செல்லாது இன்றும் பாரம்பரிய சிறு தொழில் முறைகளையே கையாள்கின்றீர்கள்.

அதனால்தான் இந்திய மீனவர்கள் இங்கு வந்து தொழில் புரிகின்றனர். அவர்கள் போன்று நவீன மீன்பிடி முறைகளை நாங்கள் கையாள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4-100)

# வவுனியாவில் 98 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுப்பு



(நெளுக்குளம்)

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தீவிரமடைந்ததையடுத்து, முன் எச்சரிக்கை நடவடிக்கைகளிற்காக வவுனியாவில் பல்வேறுபட்ட நபர்களிடம் பி.சி.ஆர்.பரிசோதனைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் பம்பைமடுவில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்று வரும் கம்பஹா மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த 90 பேருக்கு நேற்றுக்காலை வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் வவுனியா தோணிக்கல் ஆலடிப்பகுதியில் வசிக்கும் உறவினர்களை மினுவாங்கொடையில் இருந்து வருகை தந்து சந்தித்த பெண் ஒருவருக்குக் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து அக்குடும்பம் வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, 3 சிறுபிள்ளைகள் என 5 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், குறித்த பெண் தொடர்புகளை பேணியதாக தெரிவித்து வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் இரு பெண்களும் பி.சி.ஆர்.பரிசோதனைகளிற்கு உட்படுத்தப்பட்டனர்.

எனினும் கொரோனா உறுதிப்படுத்தப்பட்ட தமது சகோதரி கடந்த மாதம் 10 ஆம் திகதியே தமது வீட்டிற்கு இறுதியாக வந்ததாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் பணியாற்றிய கூமாங்குளம் பகுதியில் வசித்து வரும் சமாதான நீதவான் ஒருவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா கூமாங்குளம் பகுதியில் வசித்து வரும் குறித்த சமாதான நீதவான் வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் சமாதான நீதவனாக கடமையாற்றி வருகின்றார்.

இந்நிலையில் அவரிடம் ஒப்பம் பெற்றுக்கொள்வதற்காக கொரோனா நோய் தொற்றுக்குட்பட்டுள்ள தொற்றாளர் ஒருவர் வந்து சென்றதை உறுதிப்படுத்தியதையடுத்து அவரைத் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தியுள்ளனர். அவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் யாழ். போதனா வைத்தியசாலையின் ஆய்வு கூடத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-299)

## இராசிபலன்

07.10.2020
புரட்டாதி 21, புதன்கிழமை
பஞ்சமி முற்பகல் 11.57 மணிவரை
ரோகினி முன்னிரவு 6.38 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சந்திராஷ்டமம் விசாகம், அனுசம். வளவன்

**மேஷம்** — துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப் புண்டு.

**ரிஷபம்** — எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடப்பர்.

**மிதுனம்** — நண்பர்கள் தொடர்பான சில வேலை களுக்காக சற்று அலைய நேரிடலாம், பயணங்களால் பலனுண்டு, சுப விரயங்கள் கூடும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கடகம்** — வருமானம் பெருகி வளம் காணும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், குடும் பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கௌரவமான நாள்.

**சிம்மம்** — உற்சாகத்துடன் பணிபுரிந்து பலரது பாராட்டுக்களையும் பெறுவீர்கள். வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உற்ற நண்பர்கள் உறுதுணை யாக இருப்பர்.

**கன்னி** — எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய் ப்புண்டு, மாற்று கருத்துடையோர் மனம் மாறுவர், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுக முண்டு.

**துலாம்** — பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற் படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும், செலவும் சமமாகும் நாள், எடு த்த காரியங்களில் சிறு தடை தடங் கல்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** — தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வரு மானம் திருப்தி தரும் வகையில் அமை யும், வெளியூர்த் தொடர்புகள் அனு கூலம் தரும்.

**தனுசு** — ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின் னணியாக செயற்படுவர், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆரோக்கி யமான நாள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** — உள்ளம் மகிழும் வகையில் உதிரிவரு மானங்கள் வந்து சேரலாம், மறைமுக போட்டிகள் மாறும், செய்தொழில் மேன்மையுண்டு, வசதி வாய்ப்புகளை பொருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**கும்பம்** — உறவினர் வழியில் மனதிற்கினிய சம் வங்கள் இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ் வீர்கள்.

**மீனம்** — குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர், வெற்றி தரும் செய் திகள் வந்து சேரலாம், காரிய அனுகூல முண்டு, வருமானம் திருப்திதரும் வகை யில் அமையும்.

எந்த நற்செயலையும் திறம்பட செய் உன் திறமைகளைத் தூங்கவிடாதே

# 'முடங்குவது' எளிது; முன்னேறும் வழி அதுவல்ல

## இராணுவத் தளபதி



**(கொழும்பு) 'முடக்கம்' என்பது எளிதான முறையாக இருந்தாலும் அது இலங்கை மக்கள் பிழைப்புக்கு விதிக்கப்படும் அடக்கு முறையாக அமையும் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

சிங்கள ஊடகமொன்றில் நேற்று செவாய்க்கிழமை காலை இடம்பெற்ற நிகழ்ச் சியில் இணைந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றாளி அடையாளம் காணப்பட்டதுடன் உடனடியாக நாட்டை முடக்கு வது முக்கியமானதல்ல என வும் மாறாக குறித்த தொற்றா ளியை இனங்கண்டு அதனூ டாக சமூக பரவலை தடுப்பதே அவசியம் எனவும் இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற் றிய பெண்ணுக்கு கொரோனாத் தொற்று அடையாளம் காணப் பட்டவுடன் மூன்று பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கி பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

அந்தப் பகுதிகளில் இருந்து அதிகமான மக்கள் வேலைக்கு வருவதனை கருத்திற் கொண்டே மூன்று பொலிஸ் பிரிவுகளுக்கு மாத்திரம் இவ் வாறு ஊடரங்கு அமுல்படுத்தப் பட்டது.

ஜனாதிபதியுடன் கலந்து ரையாடிய பின்னரே அந்த பகு திகளில் தொடர்ந்தும் ஊரடங் குச் சட்டம் அமுலில் உள்ள தாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த ஆடை தொழிற்சாலையில் பணிபுரியும் 1400 பேரில் 495 பேரைத் தவிர ஏனைய அனைவரும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ள பகுதியில் உள்ள னர் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

ஏனைய 495 பேர் இலங் கையின் பல்வேறு பகுதி களிலும் வசிக்கின்றனர் என் றும் எனவே அவர்களின் தொழிலை இடைநிறுத்தினால் பாதிப்பு ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தொழிற்சாலை பகு திகளை விட்டு வெளியேறிய வர்கள் அனைவரும் அடையா ளம் காணப்பட்டு நேற்றிரவு முதல் 125 இற்கும் மேற்பட்டவர் களை இராணுவத்தினால் பரா மரிக்கப்படும் தனிமைப்படுத் தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

. எஞ்சியவர்களில் பெரும் பாலானோர் இந்த பகுதியில் வசிக்கின்றனர் என்பதால், தாம் இதுபோன்ற ஒரு சூழ்நிலை யில் முழு முடக்கத்தை அமு லாக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அதனை செய்வது மிகவும் எளிதானது என்றாலும் அது நாடு முன்னேறும் வழி யாக அமையாது என்றும் இரா ணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரி வித்துள்ளார். (நி-4)

## பரீட்சைகள் திணைக்களத்தின் வேண்டுகோள்

(கொழும்பு)

தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான சூழ்நிலையில், பரீட்சை சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கும் அனைவரையும் திணைக் களத்திற்குச் செல்ல வேண்டாம் என்றும் அதற்கு பதிலாக ஒன்லைன் சேவைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் பரீட்சைத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

நாட்டில் கொரோனா தொற்று சமூகமட்டத்தில் பரவத் தொடங்கியதனையடுத்து பொதுமக்களை தேவையற்ற பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என்று சுகாதார அமைச்சு அறிவுறுத்தி யுள்ளது.

இந்த நிலையில் பரீட்சை சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கும் அனைவரையும் திணைக் களத்திற்குச் செல்ல வேண்டாம் என்றும் அதற்கு பதிலாக ஒன்லைன் சேவைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளது. பரீட்சை சான்றிதழ்களை ஒன்லைன் முறை மூலம் கோரலாம் மற்றும் பெறலாம் என்று பரீட்சைகள் ஆணையர் ஜெனரல் சனத் பி.பூஜித் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## திவுலப்பிட்டிய பகுதி பெண்ணின் குடும்பம் தீவிர கண்காணிப்பில்

(கொழும்பு)

கம்பஹா - திவுலப்பிட்டிய பிர தேசத்தில் 39 வயதுடைய ஆடை தொழிற்சாலை ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற் றுடன் அடையாளம் காணப்பட்டார்.

அத்துடன் அவரது 16 வய துடைய மகளும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

குறித்த பெண்ணின் கண வர் மற்றும் 3 பிள்ளைகள் ஹபராதுவ பொலிஸ் தனிமைப் படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த பெண் ணின் கணவர் தனது மனை விக்கு ஆடைத் தொழிற்சா லையைத் தவிர வேறு இடங் களில் கொரோனா தொற்றியி ருக்க வாய்ப்பு இல்லை என உறுதியாக தெரிவித்துள்ளார்.

எனினும் திவுலப்பிட்டிய பகு தியில் கொரோனாத் தொற்று ஆரம்பமான இடம் எதுவென இதுவரையில் கண்டறியப்ப டவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (ஜ-4)

## குணமடைந்தோர் 3266

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற் றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 7 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி இதுவரை 3266 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

இந்நிலையில் 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (ஜ-4)

# பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

## (நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)

03



**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

**கேள்வி 9:-** கட்சிகளால் நியமிக்கப்படுகின்ற வாக்கெண்ணல் முகவர்கள் எப்போது வாக்கெண்ணும் நிலையத்திற்கு வரமுடியும்?

**பதில் :-** வாக்குப்பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையத்திற்கு வர ஓரிரு மணித்தியாலயங்களுக்கு முதலே அவர்கள் வாக்கெண்ணும் நிலையத்திற்கு வரமுடியும். வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் கூட முகவர்கள் வருகை தரமுடியும்.

அவர்கள் வாக்கெண்ணல் முகவர்கள் நியமனக்கடிதம், தேசிய அடையாள அட்டை மற்றும் வாக்கெண்ணல்முகவர் அட்டையையும்கொண்டு வருதல் வேண்டும். அவர்களிடம் இரகசியம் பேணல் வெளிப்படுத்துகைகளில் கையொப்பம் பெறப்படும். இது பெறப்படுவதன் முக்கிய நோக்கம் வாக்கெண்ணும் நிலையத்தில் நடைபெறும் விடயங்கள் சம்பந்தமாக உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் வரை அவ்விடயங்கள் சம்பந்தமாக இரகசியம் பேணபடல் வேண்டுமென்பதற்காக.

**வாக்கெண்ணும் நிலையத்தில் நடைபெறும் விடயங்கள் சம்பந்தமாக உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் வரை அவ்விடயங்கள் சம்பந்தமாக இரகசியம் பேணபடல் வேண்டுமென்பதற்காக. இரகசியம் பேணல் வெளிப்படுத்துகை வாக்கெண்ணும் நிலையத்தில் இருக்கும் சகலரிடமும் பெறப்படும்.**

இவ் இரகசியம் பேணல் வெளிப்படுத்துகை அங்கு கடமை செய்யும் தேர்தல் அதிகாரிகள் சகலரிடமும் பெறப்படும். அன்று யாழ்.மத்திய கல்லூரி வளாகத்தில் இடம்பெற்ற சம்பவம் குறித்து தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட சசிகலா ரவிராஜ் தெரிவிக்கையில், "தமிழரசுக் கட்சியில் போட்டியிட்ட எனக்கு விருப்பு வாக்குகளின் அடிப்படையில் இரண்டாவது இடம் கிடைத்திருந்தது. இதனை, ஊடகங்களும் சில அதிகாரிகளும் உறுதிப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் உத்தியோக பூர்வ அறிவிப்பு வரும்வரை காத்திருந்தேன்" என்று கூறியிருந்தார். அதிகாரிகள் இரகசியம் பேணல் வெளிப்படுத்துகை உறுதியுரையை வழங்கிய பின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வரும் முன் இவ்வாறு உறுதிப்படுத்தியிருப்பார்கள் என்பது சந்தேகமே.

**கேள்வி 10 :-** தெரிவத்தாட்சி அலுவலரிடம் வாக்குச்சீட்டுகளை எண்ணத் தொடங்குவதற்கான அனுமதியைப் பெற்றபின் எப்போது எண்ணுகை ஆரம்பிக்கப்படும்?

**பதில் :-** வாக்கெண்ணல் முகவர்கள் வாக்கெண்ணும் நிலையத்தில் உள்ள வாக்குப்பெட்டிகளில் இடப்பட்ட முத்திரைகள் மற்றைய விபரங்களை அவற்றை கைகளால் தொடாது பரீட்சித்துப் பார்க்க முடியும்.

வாக்கெண்ணல் முகவர்கள் எந்தவொரு ஆவணத்தையும் எந்தவொரு நேரத்திலும் பார்வையிட அனுமதி வழங்கப்படும். வாக்கெண்ணும் மண்டபம் பொதுவாக படம்-1 இல் காட்டிய ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப்படும்.

தெரிவத்தாட்சி அலுவலரிடம் வாக்குச்சீட்டுகளை எண்ணத் தொடங்குவதற்கான அனுமதியைப் பெற்றபின் தலைமை வாக்கெண்ணும் அலுவலர் வாக்கெண்ணும் மண்டபத்தில் எல்லா வாக்கெண்ணல் முகவர்களையும் பணி அலுவலர்களையும் விளித்து வாக்கெண்ணல் தொடர்பாகவும் வாக்கெண்ணும் மண்டபத்தின் அலுவல்கள் நடைபெறுகின்ற விதம் பற்றியும் சுருக்கமாக விளக்குவார். வாக்கெண்ணலில் மூன்று கட்டங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்று பற்றியும் சுருக்கமாக விளக்குவார். அதன் பின்னர் வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படும்.

**கேள்வி 11 :-** கேள்வி 10 இல் கூறப்பட்ட வாக்கெண்ணலின் மூன்று கட்டங்களும் எவை?

**பதில் :-** முதலாம் கட்டம்:- ஒவ்வொரு வாக்குப்பெட்டியிலுமுள்ள வாக்குச்சீட்டுகளின் தொகையை எண்ணி வாக்குச்சீட்டு கணக்குடன் ஒப்புநோக்கல். வாக்குச்சீட்டு கணக்கு என்பது கேள்வி 6 இன் பதிலில் சொல்லப்பட்ட "போடப்பட்ட வாக்குகளின் கணக்கறிக்கை" ஆகும்.

இரண்டாம் கட்டம்:- ஒவ்வொரு கட்சியினாலும் / சுயேட்சைக் குழுவினாலும் பெறப்பட்டுள்ள வாக்குத் தொகையை வெவ்வேறாக எண்ணல். இதுபற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

மூன்றாம் கட்டம்:- வேட்பாளர்கள் ஒவ்வொருவரினாலும் பெறப்பட்ட விருப்பு வாக்குகளை எண்ணல். இது பற்றியும் பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

**வாக்கெண்ணல் மூன்று கட்டங்களில் நடைபெறுகின்றன. முதலாம் கட்டம்:- ஒவ்வொரு வாக்குப்பெட்டியிலுமுள்ள வாக்குச்சீட்டுகளின் தொகையை எண்ணி வாக்குச்சீட்டு கணக்குடன் ஒப்புநோக்கல். இரண்டாம் கட்டம்:- ஒவ்வொரு கட்சியினாலும் / சுயேட்சைக் குழுவினாலும் பெறப்பட்டுள்ள வாக்குத் தொகையை வெவ்வேறாக எண்ணல். மூன்றாம் கட்டம்:- வேட்பாளர் ஒருவரினால் பெறப்பட்ட விருப்பு வாக்குகளை எண்ணல்.**

**கேள்வி 12 :-** முதலாம் கட்டத்திலுள்ள நடபடிகள் எவை?

**பதில் :-** முதலாம் கட்ட நடபடியில் வாக்கெண்ணும் மேசையின் ஒழுங்கு முறையை படம்-1 காட்டுகிறது. முதலாம் கட்டத்தில் ஒரேயடியாக பல வாக்குப்பெட்டிகளில் உள்ள வாக்குச் சீட்டுக்களை எண்ணக்கூடியவாறு வாக்கெண்ணும் மேசையை (படம்-1 இல் இலக்கம் 2) கம்புத் தடிகள் மூலம் பல பிரிவுகளாகப் (3 அல்லது 4 அல்லது 5) பிரித்துக் கொள்ளப்படும்.

படம்-1 இல் அவை a,b,c,d,e எனக் காட்டப்பட்டுள்ளது. இக் கம்புத் தடிகள் வைக்கப்படும் காரணம் ஒரு பிரிவில் எண்ணப்படும் வாக்குகள் மற்றப் பிரிவுடன் கலந்துவிடக் கூடாது என்பதற்காக.

வாக்கெண்ணும் பணியாளர்கள் இம்மேசையின் இரு புறத்திலும் அமர்ந்து இருப்பார்கள். (படம்-1ஐப் பார்க்கவும்) பணியாளர்களின் இருக்கையின் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு உதவித்தெரிவத்தாட்சி அலுவலர் பொறுப்பாக இருப்பார். (படம்-1 இல் முக்கோண வடிவத்தில் காட்டப்பட்டுள்ளது).


தலைமை வாக்கெண்ணும் அலுவலர் கேள்வி 6 இன் பதில் கூறப்பட்ட தன்னால் பெறப்பட்ட சகல வாக்குச் சீட்டுக் கணக்கு உள்ளடக்கிய உறைகளையும் வரிசைக் கிரமத்தில் அடுக்கி வைத்திருப்பார். வாக்குச்சீட்டு பெட்டிகள் திறக்கப்படும் போது அவ் உறைகளும் திறக்கப்படும்.

வாக்குச் சீட்டுக் கணக்குகள் வாக்கெண்ணல் முகவர்களுக்கு காட்டப்படுவதோடு வாக்குச்சீட்டு பெட்டிகளைத் திறப்பதற்கு முன்னர் இலச்சினைகளைப் பரீட்சித்துப் பார்க்கும்படி தலைமை வாக்கெண்ணும் அலுவலரால் வாக்கெண்ணல் முகவர்களுக்கு அறிவிக்கப்படும்.

அதன்பின்னர் வாக்கெண்ணும் நிலையத்திற்கு கிடைத்த வாக்குப் பெட்டிகளின் ஒழுங்கு வரிசையில் முதல் வாக்குப் பெட்டியின் வாக்குச் சீட்டுக் கணக்கு உறை தலைமை வாக்கெண்ணும் அலுவலரால் திறக்கப்பட்டு வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர் உரத்து வாசிக்கப்படும்.

படம்-1 முதலாம் கட்டம்

வாக்கு எண்ணல் நடபடி 1




(தொடரும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# கீழாநெல்லியும், செங்கீழா நெல்லியும்

**கீழாநெல்லி**
**Phyllanthus nuriri - Botanicl N**
**Family - Euphorbiaceae**
**Sinh - Bimnelli/Pitawakka**

**செங்கீழா நெல்லி**
**Botanical Name - Phyllanthus Urinaria**
**Family - Euphorbiaceae**
**Sinh - Ratpitawakka.**



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D (Siddha) India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

கீழா நெல்லியானது ஒரு பருவ குறுஞ்செடியாகும். செங்குத்தாக அல்லது தரை மீது படர்ந்தோ காணப்படும். இலைகள் முட்டை வடிவின. மலர்கள் இலைக் கோணத்தில் அமைந்தவை. கனிகள் அமுக்கப்பட்டும் கோளவடிவினதாகவும் இருக்கும். வெப்பமான பகுதிகளில் பரம்பல் அதிகமாகக் காணப்படும்.

இரத்தத்தில் ஈமோகுளோபின் அளவை அதிகரிக்கச் செய்ய சிறந்த மூலிகையாகும். இதற்கு தினமும் கீழாநெல்லி முழுச்செடியையும் சேகரித்து கழுவி அரைத்து 5 கிராம் அளவு தினமும் சாப்பிட்டு வெந்நீர் அருந்த சிறந்த பலனைக் கொடுக்கும். தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டு வர வேண்டும்.

அல்லது கீழா நெல்லி முழுச் செடிகளையும் சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக்கொள்ள வேண்டும். தினமும் 1 டம்ளர் பாலில் 1/2 தே.கரண்டி அளவு கரைத்து எடுத்து வர இரத்தம் விருத்தி அடையும்.

இலையின் சாறு 300 மில்லியோடு நாம் தலைக்கு தேய்க்கும் தைலம் 600 மில்லி சேர்த்து காய்ச்சி நீர் சுண்டியதும் வடித்து வைத்துக்கொண்டு குளிர்ப்பதற்கும் தலைக்கு தேய்ப்பதற்கும் பயன்படுத்தலாம். இதனால் உடல் உஷ்ணம் தணிந்து, பித்த நோய்களும் தீரும்.

சாம்பல், மண் போன்றவற்றை உண்ணும் குழந்தைகட்கு கீழா நெல்லி வேர், கடுக்காய் தோல், மிளகு இவைகளை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்த குழந்தையின் வயதிற்கும் உடல் அமைப்பிற்கும் தக்கவாறு புளித்த மோரில் அரைத்து கலக்கி தொடர்ந்து ஒரு வாரம் கொடுக்கவும். அடிக்கடி கொடுத்தால் நிச்சயமாய் குழந்தைகள் மண் தின்பதை நிறுத்திக் கொள்ளும்.

நாட்பட்ட காய்ச்சலுக்கு கீழா நெல்லி இலைகள் 1 பங்கும், மிளகு 1/2 பங்கும், வெள்ளைப் பூண்டு 1/2 பங்கும் சேர்த்து நன்றாக அரைத்து மிளகளவு மாத்திரைகளைச் செய்து உலர்த்தி காலை, மாலை வேளைகளில் வெந்நீரில் எடுக்க காய்ச்சல் தணியும்.

கீழாநெல்லி இலைகளை போதுமான அளவு அரைத்து உடம்பில் தேய்த்து குளித்துவர உடம்பில் ஏற்படும் அரிப்பு, சிறு புண்கள் நீங்கி விடும்.

வாரத்திற்கு இருமுறை இதன் இலைகள் சிறிதளவு எடுத்து அரைத்து பாலோடு சேர்த்தோ அல்லது நீரிலோ கொடுத்துவர குழந்தைகட்கு ஏற்படும் வயிற்று மந்தம், கல்லீரல், மண்ணீரல் வீக்கத்தை தணிக்கும்.

இலைகளை தனியாக பறித்து அரைத்து ஒரு எலுமிச்சம் காயளவு எடுத்து மோரில் கலக்கி காலையில்



கீழ்காய்நெல்லி

ஒரு வேளை சாப்பிட சிறுநீர் எரிச்சல், வெள்ளை சாய்தல் நீங்கும்.

இதன் முழுச் செடியையும் நீரில் சுத்தம் செய்து நீர் விடாமல் அரைத்து 5 கிராம் அளவு மோரில் கலந்து சாப்பிட்டுவர காமாலை நோய் குணமாகும்.

கீழாநெல்லி ஓர் காயகல்ப மூலிகையாகும். கீழாநெல்லி செடிகளை கழுவி நிழலில் உலர்த்தி இடித்து சூரணித்து (பொடித்து) வைத்துக் கொள்ளவும். இத்துடன் அரைப் பங்கிற்கு தேற்றான் கொட்டை எடுத்து பசுப்பாலில் வேக வைத்து எடுத்து நன்றாக அலம்பி கல்லுரலில் போட்டு இடித்து பொடித்து வைத்துக் கொள்ளவும்.



செங்கீழ்காய் நெல்லி

கீழாநெல்லி பொடி 2 தேக்கரண்டி, தேற்றான் கொட்டைப் பொடி அரைத் தேக்கரண்டி வீதமும் எடுத்து 350 மில்லி தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து 1/4 பங்காக வற்றவைத்து 120 மில்லி காய்ச்சிய பசுவின் பாலில் கலந்து சிறிது பனைவெல்லமும் சேர்த்து தினமும் காலையில் அருந்திவர தேக பலமும் நோய் எதிர்ப்பாற்றலும் அதிகரிக்கும்.

இவ்வாறு கீழாநெல்லி மூலியை கற்ப முறைப்படி எடுக்க தேக ஆரோக்கியம் மேம்படும். மாதவிடாய் காலத்திற்கு ஏற்படும் கூடுதலான இரத்த போக்கிற்கும் கீழா நெல்லி வேர் 20 கிராம், நாவல் பட்டை 20 கிராம் இவ்விரண்டையும் மைபோல அரைத்து 350 மில்லி புளித்த மோரில் கலந்து அத்துடன் புதிதாக அரைத்தெடுத்த சந்தனம் 5 கிராம் போட்டு கலக்கி தினமும் காலையில் பருகிவர குணமாகும். நோய் நீங்கும் வரை சாப்பிட வேண்டும்.

கீழாநெல்லித் தைலம் இதனை வீட்டிலேயே தயாரித்துக் கொள்ள முடியும். உட்காய்ச்சல் இருக்கும் போது தைலப் பிரயோகமும் சித்த மருத்துவத்தில் ஓர் சிகிச்சை முறையாகும். கீழா நெல்லியை நிழலில் உலர்த்தி பொடித்த தூள் 700 கிராம் இதற்கு 8 பங்கு நீர் விட்டு 1/8 பங்காக சுண்டக்காய்ச்சி, இதற்கு பசுவின்பால் 700 மில்லி, நல்லெண்ணெய் 700 மில்லி சேர்த்து 30 கிராம் சீரகத்தை பசுவின்பால் விட்டரைத்து சேர்த்து காய்ச்சி பதத்தில் வடித்துக் கொண்டு வாரம் இரு முறை நன்றாக தலைக்கு தேய்த்து வர உட்காய்ச்சல், கை, கால், கண் எரிச்சல், தலைச்சுற்றல், பித்த மயக்கம் ஆகியன நீங்கும்.

ஆய்ந்து எடுத்த கீழாநெல்லியிலை, பொன்னாங்காணி, மூக்கிரட்டை இலைகளை சம அளவாக எடுத்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து 5 கிராம் விழுதை வாயில் போட்டு நீராகாரம் சாப்பிட வேண்டும் இவ்வாறு 7 நாட்கள் சாப்பிட்டாலும் காமாலை நோய் தீரும்.

கீழாநெல்லி கீரையை சமைத்துச் சாப்பிட்டு வந்தாலும் இரத்தம் விருத்தியாகும். காமாலை நோயும் குணமாகும். கீழாநெல்லிச்சாறு 15 மில்லி, சிறுநெருஞ்சில் சாறு 15 மில்லி கலந்து தினமும் 30 மில்லி காலையில் வெறும் வயிற்றில் குடித்து வர பித்தப்பை கற்கள் கரையும்.

கீழாநெல்லி இலைகளை சாறு பிழிந்து கற்கண்டு சேர்த்து குடித்தால் சிறுநீர் தொடர்பான பாதிப்புக்கள் குணமாகும். கீழா நெல்லி, கரிசாலை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து தினமும் 5 கிராம் அளவு சாப்பிட்டு வந்தாலும் குருதிக் குறைவு (இரத்தச் சோகை) குணமாகும்.

கீழாநெல்லி, மருதாணி, மஞ்சள் ஆகியவற்றை சேர்ந்து அரைத்து கால்களில் பூசினால் பித்த வெடிப்பு, நேற்றுப்புண் போன்றன குணமாகும். கீழாநெல்லியில் குடிநீர் காய்ச்சி அதில் படிகாரம் அல்லது சீனாகாரம் சிறிதளவு கலந்து வாய் கொப்பளித்து வந்தால் வாயில் ஏற்படும் நோய்த்தொற்றுக்கள் குணமாகும்.

கீழாநெல்லி, செங்கீழா நெல்லி இரண்டு மூலிகைகளும் வருடம் முழுக்க பூக்கக்கூடியது. செங்கீழா நெல்லியானது ஓராண்டு வாழக்கூடியது. தனியிலை, ஒன்றுவிட்ட இலையமைப்பைக் கொண்டது. கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் இதன் பரம்பல் அதிகம்.

செங்கீழாநெல்லி சிவப்பு நிறமுடையது. ஆனால் சிறுசிறு பக்கக் கிளைகளைக் கொண்டிருக்கும். இவ் முழுச்செடியின் குடிநீர் குன்மநோயிற்கு (வயிற்றுப்புண் - gastric ulcer) சிறந்ததாகும். இதற்கு முழுச்செடியும் ஒரு பங்கு எடுத்து 8 பங்கு நீர்விட்டு 1/8 பங்காகக் சுண்டக் குடிநீர் காய்ச்சி 60 மில்லி அளவு காலை, மதியம், மாலை எடுத்துவர வேண்டும்.

செங்கீழா நெல்லிக்கும் சிறுநீரைப் பெருக்கும் குணமுண்டு. செங்கீழாநெல்லி வேரைக் குடிநீர் காய்ச்சி 60 மில்லி அளவு இரவில் எடுக்க நித்திரையின்மை நீங்கும்.

கீழாநெல்லி போன்று, செங்கீழா நெல்லியையும் வெள்ளைசாய்தல், உடல் வீக்கம், சிறுநீர் தாரையில் ஏற்படும் தொற்று நிலைமைகளிலும் பயன்படுத்தலாம். ஆனால் கற்ப மூலியாக பயன்படுத்துவதற்கு கீழா நெல்லி மூலியே சிறந்ததாகும்.

கீழாநெல்லி தேயிலைப் பொடி கீழாநெல்லி செடிகளை சேகரித்து நன்கு நீரில் கழுவி பிடியாக கட்டித் தொங்கிவிட்டு உலர்த்தி பின்பு சிறுசிறு துண்டுகளாக பிடியை நறுக்கி அரவல் நொருவலாக்கி 1 1/2 தேக்கரண்டியை 200 மில்லி சுடுநீரில் போட்டு ஊறவிட்டு தேநீராக பயன்படுத்திவர ஈரலை பலப்படுத்துவதோடு இரத்தத்தையும் விருத்தி செய்து நோய் எதிர்ப்பாற்றலையும் அதிகரிக்கும்.

இதேபோல் வயிற்றுப்புண் (gastric ulcer) நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் செங்கீழா நெல்லியை தேநீர் பொடியாக இளஞ்சூடாக தயாரித்து பருகிவர குடற்புண் ஆறும்.

ஈரல் நோய்கள் வராமல் ஈரலை பாதுகாக்கக்கூடிய சிறந்த கற்ப மூலிகையாகும். நீரிழிவு நோயாளிகளில் இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப்படுத்தக் கூடியது கீழா நெல்லி. இதற்கு கீழாநெல்லி செடியின் நுனிப்பகுதிகளை சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில் பயன்படுத்தலாம்.

கீழாநெல்லி பங்கஷ் தொற்றிற்கு எதிராக செயற்படக்கூடியது. முகப்பருக்களுக்கு இதன் இலைகளை சேகரித்து கழுவி நீர்விடாமல் அரைத்து முகப்பருக்களுக்கு பூசிவர பருக்கள் மறையும்.

சிறுநீரக கற்கள் இருப்பவர்கள் கீழாநெல்லி செடிகளை சேகரித்து நீர்விடாமல் அரைத்து 5-10 கிராம் அளவு தினமும் காலையில் எடுத்து வெந்நீர் அருந்திவர சிறுநீரக கற்கள் கரையும்.

# பாரதம்



## பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த பெண்களே வன்முறைக்கு அதிகம் ஆளாகின்றனர்

### இந்தியா குறித்து ஐ.நா. கவலை




(டில்லி)

இந்தியாவில் பின்தங்கிய சமூகத்தைச்சேர்ந்த பெண்கள் மற்றும் சிறுமிகளே பாலின அடிப்படையிலான வன்முறைக்கு அதிகம் ஆளாவதாக இந்தியாவுக்கான ஐ.நா.அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்த இந்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கவை. ஆனால் அவை இன்னும் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற பிரதமரின் அழைப்பை நாங்கள் ஆதரிக்கிறோம். பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு தீர்வு காண அரசாங்கத்துக்கும் மக்கள் சமுதாயத்திற்கும்தொடர்ச்சியான ஆதரவை வழங்க உறுதியுடன் உள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

## நீர்மூழ்கிக்கப்பல் எதிர்ப்பு ஏவுகணை பரிசோதனை வெற்றி - ராஜ்நாத்சிங்





(டில்லி)

'ஸ்மார்ட்' சோதனையை வெற்றிகரமாக நடத்திய அதிகாரிகளுக்கு இராணுவ அமைச்சர் ராஜ்நாத்சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

டார்பிடோ எனப்படும் நீர்மூழ்கி குண்டுகளை செலுத்த உதவும் சுப்பர்சொனிக் ஏவுகணை ஒன்றை இந்திய இராணுவ ஆய்வு மற்றும் மேம்பாட்டு அமைப்பு நேற்று முன்தினம் ஒடிசாவின் வீலர் தீவில் பரிசோதித்தது. இந்த சோதனை வெற்றிகரமாக அமைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சோதனையின்போது குறிப்பிட்ட இலக்கை ஏவுகணை வெற்றிகரமாக தாக்கியது. குறிப்பாக வேகக்குறைப்பு மெக்கானிசத்தை நிலை நிறுத்துதல், டார்பிடோவை வெளி தள்ளுதல், கூம்பு பிரிதல் உள்ளிட்ட ஏவுகணையின் அனைத்து நோக்கங்களும் வெற்றிகரமாக எட்டப்பட்டதாக அவர்கள் கூறினர்.

இந்தச் சோதனை வெற்றி பெற்றிருப்பதன் மூலம் நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு எதிரான தளபாட உருவாக்கத்தில் முக்கிய கட்டத்தை எட்டியுள்ளதாக தெரிவித்தனர்.

'ஸ்மார்ட்' சோதனையை வெற்றிகரமாக நடத்திய அதிகாரிகளுக்கு இராணுவ அமைச்சர் ராஜ்நாத்சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் தளத்தில், 'சுப்பர் சொனிக் ஏவுகணை உதவியுடன் டார்பிடோ ஏவுதலை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு எதிரான தளபாடத் தயாரிப்பில் இது ஒரு மிகப்பெரிய தொழில்நுட்ப சாதனையாகும்' என்று தெரிவித்தார். (நி)

## இரண்டாவது அலையையும் தோற்கடித்த நியூசிலாந்து



(ஆக்லாந்து)

ஆக்லாந்தில் 12 நாட்களாக புதிதாக யாருக்கும் கொரோனா பரவாத நிலையில் வைரஸை மீண்டும் தோற்கடித்து விட்டோம் என நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தெரிவித்துள்ளார்.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதில் பல்வேறு நாடுகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன. அதில் வெற்றியடைந்த நாடுகள் பட்டியலில் முதல் இடத்தில் நியூசிலாந்து உள்ளது.

அந்நாட்டில் பெப்ரவரி மாதத்தில் முதல் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து, சர்வதேச எல்லைகள் மூடப்பட்டு மார்ச் மாதம் முதல் நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதன் விளைவாக அந் நாட்டில் கொரோனா பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டது.

102 நாட்களுக்கு புதிதாக யாருக்கும் கொரோனா பரவாமல் இருந்தது. இதனால், ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

ஆனால், கடந்த ஓகஸ்ட் 11 ஆம் திகதி அந்நாட்டின் தலைநகர் ஆக்லாந்தில் மீண்டும் 4 பேருக்கு புதிதாக தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனால், 15 இலட்சம்பேரை மக்கள் தொகையாக கொண்ட ஆக்லாந்தில் மீண்டும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

மேலும், கொரோனாவின் முதல் அலை வெற்றிகரமாக தடுக்கப்பட்டது போலவே இரண்டாவது அலையையும் கட்டுப்படுத்த பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தலைமையிலான நியூசிலாந்து அரசு தீவிர முயற்சிகள் மேற்கொண்டது.

அதன் விளைவாக கடந்த 12 நாட்களில் ஆக்லாந்து நகரில் புதிதாக யாருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்படவில்லை. 50 இலட்சம் பேரை மக்கள் தொகையாக கொண்ட நியூசிலாந்தில் இதுவரை ஆயிரத்து 8 55 பேருக்கு மட்டுமே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கொரோ

## 10 இல

(ஜெனீவா)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 10 இலட்சத்து 45 ஆயிரத்தை கடந்தது..

சீனாவில் ஹூபேய் மாகாணம் வுகான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 213 நாடுகள், பிரதேசங்களுக்கு பரவி பெரும் மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்த வைரஸுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே

## மருத்துவத்த

## மூவருக்

(ஸ்டோக்ஹோம்)

மருத்துவத்துக்கான நோபல் பரிசு அமெரிக்கா மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த 3 விஞ்ஞானிகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும் என நோபல் குழு அறிவித்துள்ளது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றன. உலகின் மிக உயரிய விருதாக இந்த விருதுகள் கருதப்படுகின்றன.

இதில் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், இலக்கியம் ஆகிய துறைகளுக்கான பரிசுகள் சுவீடன் தலைநகர் ஸ்டோக்ஹோமில் அறிவிக்கப்படுகிறது.

அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நோர்வேயில் அறிவிக்கப்படுகிறது.

## காற்றில் பர

(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் தொற்று காற்றின் மூலமாகவும் பரவலாம் என அமெரிக்க நோய் தடுப்பு மையம் (சிடிசி) தெரிவித்துள்ளது.

காற்றில் உள்ள வைரஸ் கிருமிகள் மனிதர்களுக்கு கொரோனாப் பாதிப்பை ஏற்படுத்தலாம் எனப் பொதுநல மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்தனர்.

# வெளிநாடு



# னாவால் திணறும் உலக நாடுகள்

## ட்சத்து 45 ஆயிரத்தை கடந்தது பலி

செல்கிறது.


இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்து 45 ஆயிரத்தை கடந்துள்ளது.

குறிப்பாக இந்திய அரசு நேற்று முன்தினம் வெளியிட்ட தகவலில் 903 பேர் உயிரிழந்துள்ளனர். அதேபோல் நேற்று முன்தினம் மட்டும் அமெரிக்காவில் 863 பேரும், பிரேசிலில் 664 பேரும் கொரோனாத் தொற்றால் பலியாகியுள்ளனர்.


தற்போதைய நிலவரப்படி, 3 கோடியே 56 இலட்சத்து 92 ஆயிரத்து 677 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைரஸ் பரவியவர்களில் 77 இலட்சத்து 88 ஆயிரத்து 208 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 66 ஆயிரத்து 785 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனாவில் இருந்து 2 கோடியே 68 இலட்சத்துக்கும் அதிகமானோர் சிகிச்சைக்கு பின் குணமடைந்துள்ளனர். ஆனாலும், உலகம் முழுவதும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 10 இலட்சத்து 45 ஆயிரத்து 828 பேர் உயிரிழந்துள்ளனர். (நி)



# திற்கான நோபல் பரிசு
# கு பகிர்ந்தளிப்பு




அவ்வகையில் 2020ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டன. முதல் நாள் மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

2020ஆம் ஆண்டிற்கான மருத்துவ நோபல் பரிசானது அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஹார்வி ஜே. ஆல்டர், சார்லஸ் எம். ரைஸ் மற்றும் பிரிட்டன் விஞ்ஞானி மைக்கேல் ஹாட்டன் ஆகியோருக்கு பகிர்ந்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹெபடைடிஸ் சி வைரஸை அடையாளம் காண இவர்களின் ஆய்வு வழிவகுத்துள்ளது. ஹெபடைடிஸ் சி வைரஸ் மட்டுமே ஹெபடைடிசை ஏற்படுத்தும் என்ற ஆய்வுக்காக இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# வெள்ளை மாளிகை திரும்பிய ட்ரம்ப்

(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டு கடந்த மூன்று நாட்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டரம்ப் வெள்ளை மாளிகைக்கு திரும்பினார்.

தனது வழக்கமான பாணியிலான உடையும், முகக்கவசமும் அணிந்திருந்த ட்ரம்ப், திங்கட்கிழமை வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார்.

வைத்தியசாலையிலிருந்து ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ ஹெலிகொப்டரான மெரைன் ஒன்னில் வெள்ளை மாளிகையை அவர் சென்றடைந்தார்.

வைத்தியசாலையிலிருந்து வெளியே வந்த ட்ரம்பிடம், "நீங்கள் நோய்த்தொற்றை பரப்புபவரா? என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

எனினும் செய்தியாளர்களின் எந்தக் கேள்விக்கும் பதிலளிக்காத ட்ரம்ப், "அனைவருக்கும் நன்றி" என்று மட்டும் கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

இதைத்தொடர்ந்து ஹெலிகொப்டரில் வெள்ளை மாளிகையை சென்றடைந்த ட்ரம்ப், பிரதான வாயிலில் நின்றவாறு தனது முகக்கவசத்தை கழற்றிவிட்டு, தான் நலமாக இருப்பதாக கட்டைவிரலை உயர்த்திக் காட்டி இராணுவ பாணியில் சல்யூட் அடித்தார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் நோய்த்தொற்றிலிருந்து ட்ரம்ப் முழுமையாகக் குணமடைந்துவிட்டாரா? என்பது குறித்து இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை.

ட்ரம்பின் உடல் நிலை குறித்த செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களும் மறுத்துவிட்டனர். (நி)

# அசர்பைஜான்- ஆர்மீனியா இடையே பரஸ்பர ஏவுகணைத் தாக்குதல்
## வலுக்கும் மோதல்

(பாகு)

அஜர்பைஜான் மற்றும் ஆர்மீனியா நாடுகளிடையே மோதல் தொடர்ந்து வலுத்து வருகிறது.

இருநாடுகளின் முக்கிய நகரங்கள் மீது பரஸ்பர ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதால் பதற்றம் அதிகரித்துள்ளது.

சோவியத் ஒன்றியத்தின் ஒருங்கிணைந்த பகுதிகளாக இருந்து வந்த அஜர்பைஜான் மற்றும் ஆர்மீனியா கடந்த 1991 ஆம் ஆண்டு தனித்தனி நாடுகளாக உருவாகின.

அப்போது தொடங்கி இப்போது வரை இரு நாடுகளுக்கும் இடையில் கடுமையான எல்லைப் பிரச்சினை நீடிக்கிறது.

கடந்த 9 நாட்களாக நாகோர்னோ காராபாக் பிராந்தியத்தில் அஜர்பைஜான் மற்றும் ஆர்மீனியா நாடுகளின் இராணுவத்துக்குமிடையே கடுமையான போர் நடந்து வருகிறது.

இந்த நிலையில் இந்த மோதல் ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடு குண்டு வீசி தாக்குதல் நடத்தும் அளவுக்கு மோசமாகியுள்ளது.

குடியிருப்பு பகுதிகள் மீது அஜர்பைஜான் இராணுவம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாக அந்தப் பிராந்தியத்தின் தன்னாட்சி நிர்வாகம் குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை அஜர்பைஜான் இராணுவம் மறுத்துள்ளது. (நி)

# ரவுமா கொரோனா?

கொரோனா வைரஸ் பரவல் பற்றி அமெரிக்க நோய்த்தடுப்பு மையம் ஏற்கனவே இதேபோன்ற அறிக்கையை வெளியிட்டு பின் அதனை திரும்பப் பெற்றது.


இந்நிலையில், சிடிசி வெளியிட்டுள்ள புதிய தகவலில் சமூக இடைவெளியை சரியாக பின்பற்றிய நபர்களுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதுபோன்ற காரணங்களால், கொரோனா வைரஸ் தொற்று காற்றிலும் பரவ வாய்ப்பு இருக்கிறது என சிடிசி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. (நி)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

**தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**



தனிமைப்படுத்தல் சட்டங்கள் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர், அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர், சட்டத்தரணி அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

3 பொலிஸ் பிரிவுகளுக்கு ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும், ஏனைய பகுதி மக்களும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நோய் அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் அது குறித்து மறைக்காது வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது அவசியம் எனவும் எவரேனும் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறும் பட்சத்தில், அவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, ஊரடங்கு சட்டம் தொடர்பில் போலி பிரசாரங்களைப் பரப்பும் நபர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் போலி பிரசாரம் செய்த நபர் குறித்து குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குறிப்பிட்டதுடன் குறித்த சந்தேக நபரை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம், சமூக வலைத்தளங்களில் பரப்பப்படுகின்ற உண்மைக்கு புறம்பான பிரசாரங்களுக்கு ஏமாற வேண்டாம் என பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களை தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அல்லது அரச தகவல் திணைக்களம் விடுக்கும் விசேட அறிக்கைகள் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் மாத்திரம் பிரசுரிக்கப்படும் எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# சரிவைச் சந்தித்த பங்குச் சந்தை

(கொழும்பு)

பல நாட்களாக சாதகமான வளர்ச்சியைக் காட்டிய கொழும்பு பங்குச் சந்தை நேற்று சரிவை சந்தித்துள்ளது. இதன்படி, அனைத்து பங்கு விலை குறியீடு 7.65 சதவீதம் சரிந்து 462.99 புள்ளிகளாக காணப்பட்டுள்ளது.

நேற்றைய நாள் முடிவில் அனைத்து பங்கு விலைக் குறியீடும் 5587.18 புள்ளிகளில் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் S&P குறியீட்டு எண் 165.92 புள்ளிகளாக சரிந்து 2288.51 ஆக முடிந்தது. இது 676 சதவீதம் குறைந்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மார்ச் மாதத்தில் தற்காலிகமாக மூடப்பட்ட கொழும்பு பங்குச் சந்தை 2020 மே முதல் வழக்கமான நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மத்திய கிழக்கிலிருந்து 302 பேர் நாடு திரும்பினர்




(கொழும்பு)

மத்திய கிழக்கில் தொழில் வாய்ப்புக்காக சென்ற மேலும் 302 இலங்கையர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை நாடு திரும்பினர்.

அதன்படி கட்டாரிலிருந்து 35 பேரும் டோகாவிலிருந்து 7 பேரும் துருக்கியிலிருந்து 260 பேரும் நாடு திரும்பினர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளும் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இல்லாமல் இருத்தல்!

ஒரு பேராசிரியர். அவர் ஒரு சமயம் ஒரு குருவைத் தேடி வந்தார். ஜப்பானிய குரு. அவர் பெயர் நான்-ன். (Nan-in)

அவரிடம் பேச வேண்டும்.. விபரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆசை.

இந்த குரு குடிசையிலே இருந்தார். இந்தப் பேராசிரியர் மிகவும் தூரம் நடந்து அந்த குடிசைக்கு வந்து சேர்ந்தார். குரு பார்த்தார். " நீங்கள் மிகவும் களைப்பாக காணப்படுகின்றீர்கள்..கொஞ்சம் இளைப்பாறுங்கள்... உங்களுக்குத் தேநீர் தயார் செய்கின்றேன்... ஒரு கோப்பை தேநீர் சாப்பிட்டு அதற்குப்பின் நாம் கலந்துரையாடலாம்" என்று சொல்லிவிட்டு தேநீர் தயாரிப்பதற்காக வெந்நீர் கொதிக்க வைத்தார். அதே சமயம் பேராசிரியரையும் லேசாக கவனித்தார்.

ஒரு பக்கம் தண்ணீர் கொதிக்கின்றது. இன்னொரு பக்கம் பேராசிரியரும் கொதித்துக் கொண்டிருக்கின்றார்.

தேநீர் பாத்திரத்திலேயிருந்தும் சத்தம் வந்து கொண்டிருக்கின்றது. பேராசிரியரிடம் இருந்தும் சத்தம் வந்து கொண்டிருக்கின்றது. ஏன் என்றால் அவர் தனக்குள்ளே பேசிக் கொண்டிருந்தார். அதாவது இந்த குருவிடம் என்ன கேட்கின்றது. எப்படி கேட்பது.. எங்கேயிருந்து ஆரம்பிக்கின்றது அப்படி என்று தன்னைத் தானே தயார் செய்து கொண்டிருந்தார்.

அந்தப் பக்கம் தேநீரும் தயாராகிவிட்டது. அந்த குரு சிரித்துக் கொண்டே இதையெல்லாம் கவனித்தார். அதற்குப் பின்பு ஒரு கோப்பையில் தேநீரை ஊற்ற ஆரம்பித்தார். பேராசிரியர் கோப்பையை கவனித்துக் கொண்டே இருக்கின்றார். கோப்பை நிரம்பி வழிய ஆரம்பித்தது. நிறுத்துங்கள் என்று கத்தினார் பொறுக்க முடியாமல்.. கோப்பையிலே இனிமேல் கொஞ்சம் கூட ஊற்ற முடியாது... உங்களுக்கு என்ன ஆகிவிட்டது? என்றார். இப்போ அந்த குரு சொல்கின்றார். இதே நிலைமையிலே தான் இப்பொழுது நீங்களும் இருக்கின்றீர்கள். நீங்களும் உங்கள் சொந்த கருத்துக்களாலும் எண்ணக் கோட்டைகளாலும் நிறைந்து இருக்கின்றீர்கள்.. நீங்கள் உங்கள் கோப்பையை காலி செய்யாத வரைக்கும் நான்.. எதை உங்களுக்குப் புதிதாக கொடுத்துவிட முடியும்? என்றார்.

கோப்பை நிரம்பிவிட்டது. இனிமேல் கொள்ளாது என்கின்ற விழிப்புணர்வு அந்தப் பேராசிரியருக்கு இருந்தது. ஆனால் தன்னைப் பற்றிய விழிப்புணர்வு அவருக்கு இல்லை.

அவர் தன்னுடைய சொந்தக் கருத்துக்கள், கோட்பாடுகள், தத்துவங்கள் இவற்றால் நிரப்பப்பட்டு பொங்கி வழிந்து கொண்டிருக்கின்றார். அதனால் அந்த குரு என்ன சொன்னார் என்றால், நீங்கள் ஏற்கனவே அதிகம் அறிந்துள்ளீர்கள்... நான் உங்களுக்கு எதையும் கொடுக்க முடியாது. என்றார்.

என்னைத் தேடி வருவதற்காக நீங்கள் மிகவும் சிரமப்பட்டிருக்கின்றீர்கள்.. வீணாக பிரயாணம் செய்து வந்திருக்கின்றீர்கள்.. நீங்கள் உங்கள் கோப்பையை கொஞ்சம் காலியாக வைத்திருந்தால் நான் அதிலே கொஞ்சமாவது ஊற்ற முடியும் என்றார். கோப்பையை காலி செய் என்றார்.

அதாவது மனதைக் காலி செய் என்று அர்த்தம். ஏன் என்றால் அங்கே நான் என்கின்ற ஆணவம் பொங்கி வழிந்து கொண்டிருக்கின்றது. ஆணவம் அங்கே இருக்கின்ற வரைக்கும் வேறு எதையும் அங்கே கொண்டு போய் சேர்க்க முடியாது. கோப்பையைக் காலி செய் இல்லை என்றால் அதை வீசி எறிந்துவிடு.. என்கின்றார் ஓஷோ.

கோப்பையை எறிந்துவிடு என்று சொன்னால் அதற்குப் பொருள் ''நான் வெறும் புறமாக இருக்கின்றேன் என்கின்ற உணர்வு கூட இல்லாமல் இருக்க வேண்டும் '' என்பது தான். ஒரு தடவை ஒரு சீடன் போதி தர்மரிடம் வந்தானாம்.

குருவே... நீங்கள் என்னை வெறுமையாக இருக்கச் சொன்னீர்கள். நான் இப்பொழுது வெறுமையானவன் ஆகிவிட்டேன்நான் திரும்பவும் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கின்றான்.

போதி தர்மர் ஒரு கம்பை எடுத்தார். அவன் தலையிலே அடித்தார். பின்பு சொன்னார். போய் அந்த வெற்றுத் தன்மையையும் எறிந்துவிட்டுவா என்றார். நான் காலியாக இருக்கின்றேன் என்றால் அதிலேயும் இருக்கு இல்லையா. அந்த நான் காலியாக இருக்க முடியாது. ஆகவே நீ வெறுமையானவன் என்று கூற முடியாது என்பது அவருடைய கருத்து.

எங்கள் ஆள் ஒருவன்.. ஒரு குருவிடம் போனான். எதுவுமே இல்லாமல் காலியாக வரவேண்டும்.. அப்பொழு தான் உனக்குச் சொல்லிக் கொடுப்பேன். என்றார் குரு. அப்படித் தான் வந்திருக்கின்றேன் என்றார். சரி முதலிலே குரு தட்சணையை வை என்றார் அவர். அதுவும் இல்லாமல் தான் வந்திருக்கின்றேன் குருவே என்றான்.. இவன்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நான் பொறுப்பில்லை

## மைத்திரி மறுப்பு

**(கொழும்பு)**

**முன்னாள் பாதுகாப்பு செயலாளரும், முன்னாள் பொலிஸ்மா அதிபருமே, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பொறுப்பு. நான் பொறுப்பில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாட்சியம் அளித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் காலை முன்னிலையான மைத்திரிபால சிறிசேன, 6 மணி நேரம் சாட்சியம் அளித்தார்.

இதன்போது அவர், சஹ்ரான் ஹாசிமை கைது செய்யுமாறு தான் உத்தரவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உரிய அதிகாரிகள் தங்கள் பணிகள் குறித்து அலட்சியமாகயிருந்தமையே தாக்குதலுக்கு காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார்.

தனது பதவிக்காலத்தின் முதல் ஆறு மாதங்கள் மாத்திரமே பிரதமரும் அமைச்சரவையும் ஆதரவளித்தன என்றும் அவர்களின் முழுமையான ஆதரவு கிடைக்காமை காரணமாக பல பின்னடைவுகள் ஏற்பட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசசார்பற்ற அமைப்புகளின் தேவையற்ற தலையீடுகள் நாட்டில் பிரச்சினையை



உருவாக்கி இன முறுகலுக்கு வழிவகுத்தன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையில் பசில் அணியை வலுப்படுத்துவதே மாற்று வழி

(கொழும்பு)

நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் நிலைமையில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தரப்பை வலுப்படுத்துவதே சிறந்த மாற்று வழியாக இருக்கும் என கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

பசில்ராஜபக்ஷ தரப்பை வலுப்படுத்த தாம் நிபந்தனையின்றி குரல் கொடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தனது முகநூல் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் தேவசிறி இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

நாம் விரும்புவது நாம் விரும்பியதை போலவே நடக்காது. அரசியல் என்பது அலையுடன் சேர்ந்து நீந்துவது அல்ல.

அலையுடன் நீந்தி பாதுகாப்பாக ஆற்றை கடப்பதே அரசியல். தற்போதைய அரசியல் நிலைமையில் அரசாங்கத்தின் பசில் அணியை வலுப்படுத்துவதற்காக நான் நிபந்தனையின்றி குரல் கொடுப்பேன்.

சிங்கள - பௌத்தம் அல்லாத மக்களுக்கு நிவாரணத்துடன் கூடிய சந்தர்ப்பம் தேவை என்றால், பசில் அணியை வலுப்படுத்துவதன்மூலமே அதனைசெயற்பாட்டு ரீதியாக செய்ய முடியும்.

அத்துடன் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை வைத்திருக்க வேண்டும் என எண்ணும் நபர்களுக்கு பசில் அணியை வலுப்படுத்துவதே மாற்றுவழி எனவும் நிர்மால் ரஞ்சித் தேவசிறி குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# ஒரு பிள்ளைக்காக ஏங்கும் இரு தாய்மார்; மரபணு பரிசோதனைக்கு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

சுனாமியால் காணாமல் போயிருந்த மகன் திரும்பி விட்டார் என்றும், தனது சொந்த மகனே இவர் என்றும் போராடி வரும் தாய்மாருக்கு நீதியை பெற்றுக்கொடுக்க மரபணு பரிசோதனை (DNA) மேற்கொள்ள சம்மாந்துறை நீதிமன்ற நீதவான் எம்.ஐ.எம்.றிஸ்வி உத்தரவிட்டார்.

சுனாமியில் காணாமல் போன மகன் 16 வருடங்களுக்குப் பின்னர் வீடு திரும்பியதாக ஒரு தாய்க்கும், தனது மகன் ஏமாற்றப்பட்டதாக மற்றுமொரு தாய்க்கும் எழுந்த பிரச்சினைக்காக கடந்த ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் வளர்ப்புத் தாயாக அடையாளப்படுத்தப்பட்ட நூறுல் இன்ஷான் என்பவர் முறைப்பாடொன்றினை பதிவு செய்திருந்தார்.

அம் முறைப்பாட்டுக்கு அமைய நேற்று முன்தினம் சம்மாந்துறை நீதிமன்ற நீதவான் எம்.ஐ.எம்.றிஸ்வி முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, சிறுவனின் வளர்ப்புத்தாய் என அடையாளப்படுத்தப்படும் அம்பாறை பிரதேசத்தை சேர்ந்த நூறுல் இன்ஷான் மற்றும் சுனாமியில் மகனை பறிகொடுத்ததாகத் தெரிவித்த மாளிகைக்காடு பிரதேசத்தை சேர்ந்த அபுசாலி சித்தி கமாலியா ஆகியோர் ஆஜராகி தத்தமது பக்க நியாயங்களை மன்றில் முன்வைத்திருந்தனர்.

குறித்த இவ்விரு தாய்மாரின் நியாயங்களையும் செவிமடுத்த நீதவான் குறித்த வழக்கில் உண்மையான தாயை இனங்காண விவாகரத்துப் பெற்று சென்ற இவ்விரு தாய்மார்களின் கணவன்மார்களையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி ஆஜராகி மரபணு பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ஐ-4)

# சுகாதார நடைமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வு வேலைத்திட்டம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை ஹற்றன் நகரில் முன்னெடுக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் பயணிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பொது வெளிக்கு வரும் போது முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல், கைகளை கழுவுதல் உட்பட எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டது.

ஆசனங்களின் எண்ணிக்கைக்கேற்பவே பயணிகள் ஏற்றப்பட வேண்டும்எனவும்நாளாந்தம் பேருந்துகளில் தொற்று நீக்கி தெளிக்கப்பட்டு தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும் எனவும் அரச மற்றும் தனியார் பேருந்துகளின் பொறுப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது. நகர சபையில்பொது சுகாதார அதிகாரிகளாலேயே இவ்வேலைத் திட்டம்முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# 20 ஆவது திருத்தம் தொடர்பான அறிக்கை கிடைத்தது-சபாநாயகர்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் அறிக்கை தனக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சபையில் நேற்று தெரிவித்தார்.

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை கேள்விக்குட்படுத்தும் வகையில் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் மீதான விசாரணை முடிவடைந்தது.

இந்த நிலையில், 20 ஆவது திருத்தம் தொடர்பான நீதிமன்றத்தின் அறிக்கை சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த அறிக்கை தனக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக தற்போது சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சபையில் அறிவித்துள்ளார். (நி-4)

# காணொளி மூலமே விசாரணைகள்

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான வழக்குவிசாரணைகளைகாணொளி தொழில்நுட்பமூடாக நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும்மேற்கொள்ளுமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர்களுக்கு அறிவித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைதிகள் தொடர்பில் நீதிபதிகளுக்கு அறிக்கை சமர்ப்பித்து, நீதிபதியின் அனுமதிக்கு அமைய தேவையான கைதிகளை மாத்திரம்காணொளி தொழில்நுட்பத்தினூடாக முன்னிலைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மறு அறிவித்தல் வரை நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் கைதிகளை பார்வையிட தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா நிலைமையை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (நி-4)

# கிழக்குப் பல்கலை.மாணவர்கள் 61 பேர் சுயதனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

விடுமுறையில் வீடு சென்று திரும்பிய கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த கிழக்கு பல்கலைக்கழகத்தின் 61 மாணவர்கள் மட்டக்களப்பில் உள்ள பல்கலைக்கழக விடுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கான பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக உபவேந்தர் ஆர்.ராகல் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்ட பிரதேசமாக கம்பஹா மாவட்டம் உள்ளது. இதனையிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தற்போது விடுமுறையில் வீடு சென்று திரும்பிய கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 61 மாணவர்களை சுயதனிமைப் படுத்தியுள்ளோம்.

இதில் மருத்துவ பீடத்தில் கல்விகற்றுவரும் 16 மாணவர்கள் மட்டக்களப்பு பார் வீதியிலுள்ள பல்கலைக்கழக விடுதியிலும் ஏனைய 45 மாணவர்கள் வந்தாறுமூலையிலுள்ள பல்கலைக்கழக விடுதியிலும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# கடல் புறா

# சமரின் முரசொலி!

காலத்தின் பதிவு




இப்படி எதிரிகளைச் சமாளிக்கும் வழியையும், பாலூர்ப் பெருந்துறையிலிருந்து குணவர்மனையும் காஞ்சனாதேவியையும் தப்ப வைத்து அழைத்துச் செல்லும் மார்க்கத்தையுமே திரும்பத் திரும்ப மனத்தில் எண்ணிக்கொண்டு அரசகுமாரியைப் பின் தொடர்ந்த இளையபல்லவன், பணியாட்களின் உதவியால் நீராட்டத்தை முடித்துக் கொண்டு குணவர்மனது உடைகளை அணிந்துகொண்டதும் போஜன அறைக்குள் நுழைந்தான்.

அவன் நுழைந்தபோது அந்த அறையில் குணவர்மன் இல்லை. காஞ்சனாதேவி மட்டுமே அவனை எதிர்கொண்டாள். முன்பு அறையின் மங்கலான வெளிச்சத்தில் பார்த்ததைவிடப் பன்மடங்கு அழகுற துலங்கினாள் காஞ்சனாதேவி. அரைகுறை ஆடையுடனும், ஆபரணமில்லாமலும் அப்பொழுது அவளைப் பார்த்த கருணாகரனுக்கு, குறைவற்ற ஆடைகளுடன் அணிமணிகளுடனும் அவள் நின்றிருந்த தோற்றம் பெரும் பிரமிப்பை அளித்தது. சேலையை மிக அழகாக அணிந்ததால் இடையிலிருந்து பட்டை கால்களுக்கிடையில் அழகாக ஓடிப் பாதங்களின் மேற்புறங்களைத் தடவ, இறுக்கிக் கட்டப்பட்ட இடை சற்று இருந்ததும் இல்லை போல் தோற்றமளிக்க நின்றிருந்தாள் காஞ்சனாதேவி. அவள் முகத்தாமரை மந்தகாசத்தால் விரிந்து கிடந்தது.

ரவிக்கைக்கு மேலே தெரிந்த வெளேரென்று சருமத்தில் நவரத்தினங்கள் பதிந்த சிறிது ஆபரணமொன்று பலப்பல நிறங்களை விளக்கொளியில் கிளப்பி, இரட்டை வண்ணச் சேலையின் வர்ண ஜாலங்களுடன் போட்டி போட்டுக் கொண்டிருந்தது. இளைய பல்லவனைக் கண்டதும் இவள் முகத்தில் வெட்கம் விரிந்தது. ஆனால் அரச தோரணை மாறாததால், கம்பீரமும் வெட்கமும் இணைந்து முகத்தின் பொலிவைப் பன்மடங்கு உயர்த்தியதைப் புரிந்து கொண்டான். அந்த வாலிப வீரன்.

அவனை வரவேற்ற காஞ்சனாதேவிகூட நீராட்டத்தாலும் புது உடை புனைந்ததாலும் இளைய பல்லவனது தோற்றத்தில் அற்புத மாற்றத்தைக் கண்டு பெரிதும் வியந்தாள். துவட்டிய பின்பும் அவன் சுருட்டை மயிர்கள் நீரை ஓரிரு இடங்களில் மணிகள் போல் சொட்டிக் கொண்டிருந்ததையும், அப்படிச் சொட்டிய நீரும் அவன் முகத்துக்குப் பெரும் கம்பீரத்தை அளித்ததையும், அழகாக இருந்த இளமீசை அவன் வீரத்துக்குச் சான்று கூறியதையும் காஞ்சனாதேவி கவனித்தாள். குணவர்மனின் அரச உடை அவனுக்கு எத்தனை பொருத்தமாக இருந்தது என்பதையும், கன்னத்திலிருந்த காயத்தின் கீறல் வடுகூட அவனுக்கு இணையற்ற அழகை அளித்ததையும், அவன் கைகள் முழந்தாளைத் தொடும் அளவுக்கு நீண்டு கிடந்ததையும் கண்ட காஞ்சனாதேவிதான் பாரதத்தின் சிறந்த வீரன் ஒருவனுக்கு முன்பு நிற்பதை அறிந்தாள். அறிந்ததன் விளைவோ, என்னவோ, "வீரரே! வருக வருக!" என்று அழைப்பும் விடுத்தாள்.

அவள் அப்படி அழைத்ததால் புன்முறுவல் கொண்ட கருணாகர பல்லவன், "ஏது, வரவேற்பு பலமாயிருக்கிறது?" என்று கேட்டுக்கொண்டே அவளை அணுகி வந்தான்.

"விருந்தினர்களை வரவேற்பதும் உபசரிப்பதும் எங்கள் நாட்டுப் பழக்கம்" என்று கூறிய காஞ்சனாதேவி, "இதோ தந்தையும் வந்து விடுவார்" என்று குணவர்மன் வராததற்கு மன்னிப்புக் கேட்கும் பாவனையில் வார்த்தைகளை உதிர்த்தாள்.

குணவர்மன் வரவைப்பற்றிக் கருணாகர பல்லவன் கவலைப்படவில்லை. காஞ்சனா தேவியுடன் தனித்திருப்பதே அவனுக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுத்ததால் "வரட்டும். நிதானமாக வரட்டும் எனக் கொன்றும் அவசரமில்லை" என்றான்.

அந்த வாலிபனின் சொற்களில் புதைந்து கிடந்த எண்ணத்தைப் புரிந்துகொண்டாலும் புரிந்து கொள்ளாதது போலவே நடித்தாள் காஞ்சனாதேவி. "உங்களைக் காக்க வைக்க இஷ்டமில்லை. இருப்பினும் தந்தை நீராடச் சற்று அதிக நேரமாகும். என்ன செய்வது?" என்று உள்ள எண்ணத்துக்கும் உதட்டுச் சொற்களுக்கும் சம்பந்தமில்லாமல் பேசினாள் காஞ்சனாதேவி. அத்தகைய சம்பாஷணை எத்தனை நேரம் நடந்தாலும் அந்த இருவருக்கும் திருப்தியாகவே இருந்திருக்கும். ஆனால் அந்தத் திருப்திக்கு இடைஞ்சலாகச் சீக்கிரமே உள்ளே நுழைந்த குணவர்மன் "உணவருந்தலாம் வாருங்கள்" என்று அழைத்தான்.

தங்கக் கலங்களில் பலப்பல விதமான உணவுகளும் கனிகளும் பரிமாறப்பட்ட போதிலும் மூவரும் அதிகமாக உண்ணவேயில்லை. மூவர் புத்தியிலும் அலை மோதிக் கொண்டிருந்த எண்ணங்கள் பசியைப் பெரிதும் தடை செய்திருந்தனவாகையால், அரை நாழிகைக்குள் உணவருந்திய அம் மூவரும் கைகழுவிவிட்டுப் பணியாட்கள் கொடுத்த பட்டுத் துணிகளில் கைகளைத் துடைத்துக் கொண்டு மாளிகையின் மாடியறையொன்றை அடைந்தனர். அந்த அறையிலிருந்த விசாலத்தையும் அதிலிருந்த மஞ்சங்களையும் பார்த்த கருணாகர பல்லவன் அவர்களுக்குத் தகுந்த ஏற்பாடுகளையே கோடக்கரைக் கூலவாணிகன் செய்திருக்கிறானென்பதை உணர்ந்து அவனைப் பெரிதும் மனத்திற்குள் பாராட்டிக் கொண்டும், அந்த அறையைத் தன் கண்களால் அளவெடுத்துக் கொண்டும் மஞ்சமொன்றில் உட்கார்ந்ததன்றி, மற்ற இருவரையும் உட்காரும்படியும் சைகை காட்டினான். அவன் சைகைப் படி காஞ்சனாதேவி எதிரேயிந்த மஞ்சமொன்றில் அமர்ந்தாளானாலும் குணவர்மன் உட்காராமல் சற்று எட்ட விலகி அவ்விருவரையும் சிறிது நேரம் பார்த்துக் கொண்டு ஏதும் பேசாமல் மௌனமாக நின்றான் கடைசியில் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு, "இளைய பல்லவரே! நான் கேட்பதற்கு மன்னிக்க வேண்டும் நீங்கள் இளைய பல்லவர் என்பதற்கு நீங்கள் கூறிய வார்த்தையைவிட வேறு சான்றுகள் இல்லை. ஆகவே தாங்கள்தான் இளைய பல்லவர் என்பதற்கு ஏதாவதொரு ஆதாரம் இருந்தால் நாம் பேசலாம்" என்று கூறினான்.

குணவர்மனின் நிலைமையைப் பூரணமாக அறிந்து கொண்டதால் அவன் காட்டிய எச்சரிக்கையைக் கண்டு சிறிதும் கோபம் கொள்ளாத இளைய பல்லவன், தன் கையை நீட்டி, பல்லவ ராஜ முத்திரையுடன் கூடிய மோதிரத்தைக் காட்டி. "இது போதுமா குணவர்மரே?" என்று வினவினான்.

குணவர்மன் திருப்தியுடன் தலையை அசைத்தான். "போதும் இளைய பல்லவரே, போதும். நான் சந்தேகப்படுவதைப் பற்றிக் கோபம் வேண்டாம். நான் அடைந்துள்ள தொல்லைகள், ஏமாற்றங்கள் என்னை அவநம்பிக்கையுள்ளவனாக அடித்திருக்கின்றன. மன்னித்துவிடுங்கள். இனி நாம் மனம் விட்டுப் பேசுவோம்" என்ற குணவர்மன், "இளைய பல்லவரே! சிறிது நேரத்தில் ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்தின் அதாவது சைலேந்திரர்கள் பேரரசின் - நீங்கள் பொதுவாக அழைக்கும் கடாரத்தின் - விந்தைக் கதையைச் சொல்கிறேன். அதற்கு முன்பு நீங்கள் சொல்லுங்கள் உங்கள் கதையை. நீங்கள் எதற்கு இந்தப் பாலூர் வந்தீர்கள்?" என்று மெல்லக் கேட்கவும் செய்தான்.

கருணாகர பல்லவனின் கூரிய கண்கள் குணவர்மனை ஊடுருவிப் பார்த்தன. "நான் சொல்வதற்கு அதிகம் எதுவுமில்லை குணவர்மரே! பூம்புகாரின் சுங்கக் காவலரிடம் உங்கள் நாட்டு ஒற்றன் ஒருவன் பிடிபட்டான்.

(தொடரும்)

## அம்பாறையில் இரு தொற்றாளர்கள்

(அம்பாறை)

கம்பஹா ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றி விடுமுறை பெற்று அம்பாறை பகுதியில் உள்ள வீடுகளுக்கு வந்த இருவர் கொரோனாத் தொற்றாளர் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் இரு கொரோனாத் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

"அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பொதுமக்கள் முகக்கவசம், சமூக இடைவெளி போன்ற சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் எச்சரித்துள்ளார்.

தற்போது கல்முனை பிராந்தியத்தில் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த 32 பேர் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## தேங்காய் ஏலம் இடை நிறுத்தம்

(கொழும்பு)

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் நடத்தப்பட்டு வரும்தேங்காய் ஏலம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, செப்டெம்பர் 30 ஆம் திகதி ஏலம் இடம்பெறவில்லை என்பதோடு, இறுதியாக செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி இடம்பெற்ற ஏலத்தில் தேங்காய் ஒன்றின் சராசரி விலை 56.493 ஆக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மரக்கறிகளை ஏற்றுமதி செய்வது தொடர்பில் ஜீவன் கலந்துரையாடல்



(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்திலிருந்து மரக்கறிகளை மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்தல் குறித்து தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மாலைதீவு உயர்ஸ்தானிகர் உமர் அப்துல் ரசாக்வுடன் கலந்துரையாடியுள்ளார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அலுவலகத்தில் இடம்பெற்ற குறித்த சந்திப்பில்,

நுவரெலியா மாவட்டத்தின் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக நுவரெலியா மாவட்டத்திலிருந்து மரக்கறிகளை மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்தல் மற்றும் நுவரெலியா மாவட்ட இளைஞர், யுவதிகளின் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது. (ஜ-4)

## கல்வி நடவடிக்கைகள் பிற்போடல்

(கொழும்பு)

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2018/2019 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட 12 ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 12ம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று அச்சம் காரணமாக கிழக்குப் பல்கலைக்கழக 2018/ 2019 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் பிற்போடப்பட்டுள்ளது. இவர்களது கல்வி நடவடிக்கைகள் ஆரம்பித்தல் தொடர்பான மீள் அறிவித்தல் பின்னர் அறிவிக்கப் படும் என்று பீடாதிபதி கலாநிதி ஜெ.கென்னடி அறிவித்துள்ளார். (ஜ-4)



# புகையிரதத் திணைக்களத்தின் அறிவிப்பு

(கொழும்பு)

கொவிட் -19 வைரஸ் பரவல் காரணமாக யாகொட தொடக்கம் வதுரவ வரையிலான புகையிரத நிலையங்களில் மறு அறிவித்தல் விடுக்கும் வரை புகையிரத சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் பயணிகள் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றாது பொறுப்பற்ற விதமாக செயற்படுகிறார்கள்.

பாதுகாப்பினை உறுதிப்படுத்த புகையிரத பாதுகாப்பு தரப்பினர் இனிவரும் நாட்களில் கடுமையான முறையில் செயற்படுவார்கள் என புகையிரதத் திணைக்கள பொது முகாமையாளர் டிலந்த பிரனாந்து தெரிவித்தார்.

கொவிட் -19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் பிரதான புகையிரத பாதைகளாக கருதப்படும் யாகொட, வதுர ஆகிய புகையிரத நிலையங்களுக்கு இடைப்பட்ட கம்பஹா, தரலுவ, பெம்முல்ல, மஹலேகொட, ஹின்தெனிய, பட்டியகொட, வெயாங்கொட ஆகிய புகையிரத நிலையங்களில் மறு அறிவித்தல் விடுக்கும் வரையில் புகையிரதங்கள் எச்சேவைக்காகவும் நிறுத்தப்படமாட்டாது.

சுகாதார பாதுகாப்பு தரப்பினர் வலியுறுத்தியுள்ள சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை கடுமையாகப் பின்பற்றுமாறு அனைத்து புகையிரத நிலையங்களுக்கும் அறிவித்தல் விடுத்துள்ளோம். கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் அதிகளவான பயணிகள் ஒரே நேரத்தில் கூடுகிறார்கள். கோட்டை புகையிரத நிலையத்தில் பயணிகள் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பின்பற்றாது பொறுப்பற்ற விதத்தில் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

புகையிரத நிலையங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொறுப்பு புகையிரத திணைக்களத்துக்கு உண்டு. ஆகையால் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுபவர்கள் புகையிரத நிலைய பாதுகாப்பு தரப்பினரால் புகையிரத நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படுவார்கள். அறிவுறுத்தல்கள் கடுமையாகச் செயற்படுத்த வேண்டிய தேவை எழும் போது அனைத்து அதிகாரங்களையும் புகையிரத திணைக்களம் பிரயோகிக்கும்என அவர் மேலும் எச்சரித்தார். (ஜ-4)

# வியாழேந்திரனுக்கு மேலுமொரு அமைச்சுப் பதவி



(கொழும்பு)

பின்தங்கிய கிராமங்கள் அபிவிருத்தி, உள்நாட்டு கால்நடை பராமரிப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சராக சதாசிவம் வியாழேந்திரன் பதவியேற்றுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அவர் நேற்று செவ்வாய்க்கிழமை பதவியேற்றுக்கொண்டார் என ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தபால் மற்றும் ஊடக இராஜாங்க அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக குறித்த பதவியும் இணைக்கப்பட்டுள்ளது. (நி-4)

# முகக்கவசம் அணியாதவர்களுக்கு இராணுவத்தினர் கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

முகக்கவசம் அணிய மறுப்போர் யாராக இருந்தாலும் அவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என இராணுவத்தினர் எச்சரித்துள்ளனர்.

அம்பாறை, கல்முனை, சவளக்கடை, சம்மாந்துறை, மத்தியமுகாம், அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை முதல் வீதியால் வருவோர், இடைநிறுத்தப்பட்டு முகக்கவசம் அணிந்து செல்லுமாறு இராணுவத்தினரால் அறிவுறுத்தப்பட்டனர்.

இவ்வாறு முகக்கவசம் அணியாது செல்பவர்கள் அடையாளம் காணப்பட்டு, சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் நாட்டின் நலனை கருத்தில் கொண்டு பாதசாரிகள், வாகன உரிமையாளர்கள், பேருந்தில் பயணிப்பவர்கள் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

குறிப்பாக வைத்தியசாலை, வங்கிகள், அரச திணைக்களங்கள், பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட பொது நிறுவனங்களில் தேவை நிமிர்த்தம் செல்லும் பொதுமக்கள், முகக்கவசங்களை அணிந்து செல்லுமாறு இராணுவத்தினர் கோரியுள்ளனர். (ஜ-4)

# அத்தியாவசியமற்ற ஊழியர்கள் வேலைக்கு வர வேண்டாம்

## கட்டுநாயக்க விமான நிலையம் வேண்டுகோள்

(கொழும்பு)

அத்தியாவசியமற்ற ஊழியர்களை வேலைக்கு வர வேண்டாம் என கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

முக்கியமாக மினுவாங்கொட, திவுலப்பிட்டிய மற்றும் வெயாங்கொட போன்ற பகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்களை வேலைக்கு வர வேண்டாம் என்று விமான நிலையம் அவசர கோரிக்கையை விடுத்துள்ளது.

அதே நேரத்தில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த விமான நிலைய ஊழியர்கள் வீட்டிலேயே இருக்குமாறு ஸ்ரீலங்கா விமான நிலையம் மற்றும் விமான சேவைகளின் இயக்குநர் ஷெஹான் சுமனசேகர தெரிவித்தார். (ஜ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2135

### சசி

காரணமின்றி சிலர் மீது கோபம் வந்தால் அப்போதே புரிந்து கொள்...! அவர்கள் மீது உன்னுடைய அன்பு கண் மூடித்தனமானது என்று..!



### லதா

நான் சிரிக்கும் போதும் அவள் கண்களில் கண்ணீரைத்தான் பார்த்தேன் நான் உண்ணும் வரை அவள் பசியின் தொடர்கதை தொடரும் நீ இறைவனை பார்க்க தொலைதூரம் செல்லத் தேவையில்லை நீ காய்ச்சலால் துடிக்கும் போது தன்னுடலில் வேதனை வாங்கும் தாய் முகத்தைப் பார்..!

### சிறி

உண்மையான ஆண் உலகத்தில் மிக அழகான பெண்ணை நேசிக்க நினைக்க மாட்டான் தன் உலகத்தை மிக அழகாக்கும் பெண்ணையே நேசிப்பான்...



### லவன்

நூறு வார்த்தைகள் வலியை ஏற்படுத்தாது... ஆனால் ஒரு நல்ல நண்பனின் மௌனம் இதயத்தில் அதிகக் கண்ணீரை ஏற்படுத்தி விடும்...



### திஷா

இன்பத்தை
Inbox - ல் வை...
துன்பத்தை
Outbox - ல் வை...
புன்னகையை
Send - பண்ணு...
கோபத்தை
Delete - பண்ணு...
மனதை
Vibrate - செய்து பார்...
வாழ்க்கை தானாக
Ring tone - ஆக மாறும்...

### மது



நீ வெளிச்சத்தில் நடந்தால் உலகமே உன்னை பின் தொடரும்... ஆனால் நீ இருட்டில் நடந்தால் உன் நிழல்கூட உன்னை பின் தொடராது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஊரடங்கை மீறிய 52 பேர் கைது

(கொழும்பு)

இலங்கையில் ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 52 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டுள்ள வெயாங்கொடை, திவுலப்பிட்டி, மினுவாங்கொடை முதலான பகுதிகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிஸ் ஊரடங்கு சட்டத்தை மீறி செயற்படுபவர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா- திவுலப்பிட்டிய பகுதியில் வசித்து வரும் 39 வயதுடைய பெண்ணொருவருக்கு கடந்த 4 ஆம் திகதி கொரோனாத் தொற்று உறுதியானதைத் தொடர்ந்து, அவருடன் தொடர்பை பேணிய பலருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து கொரோனா ரைவஸ் 'பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் குறித்த பகுதிகளிலும் பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி டச்பார் இக்னேசியஸ் பகுதியில் உள்ள களப்பில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய கல்லடி டச்பார் இக்னேசியஸ் விளையாட்டுக்கழக மைதானத்திற்கு அருகில் குறித்த சடலம் கண்டெடுக்கப்பட்டது.

சடலம் அடையாளம் காணப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர். (ஜ-4)



# ஆன்மீகம்

## நண்பன் - கடவுளும் போற்றி மகிழும் வரம்!

குந்தியின் முதல் மகன் என்று அறிந்தான். கண்ணனுடைய ஏற்பாட்டில் குந்தி கர்ணனைச் சந்தித்து 'நீ என் மகன். பாண்டவர்கள் பக்கம் வந்துவிடு,' என்கிறாள். ஆனால், கர்ணன் மறுக்கிறான். பெற்றெடுத்த தாயின் மேல் உள்ள பற்றுதலை, பாசத்தை ஆதிசங்கரர், பட்டினத்தார் போன்ற துறவிகளால்கூட அகற்ற முடியவில்லை. ஆனால், நண்பன் துரியோதனன் மீது வைத்த நட்பால் தாய்ப்பாசத்தையே தள்ளி வைத்தான் கர்ணன்.

ஆம்! உறவை விட உன்னதமானது தான் உயிர் நட்பு! உறவுகளிடம் பரிமாறிக் கொள்ளாத உணர்வுகளைக் கூட நண்பரிடம் நாம் அப்படியே கொட்டிவிட முடியும். துரியோதனன் கர்ணனிடம் கொண்டிருந்த நட்புணர்வு பரிபூரணமானது. ஒருநாள் துரியோதனின் மனைவியான பானுமதியுடன் கர்ணன் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது எதேச்சையாக அவ்விடத்திற்கு துரியோதனன் வந்தான். கணவன் வருவதை அறிந்து விருட்டென்று பானுமதி எழுந்தாள். விளையாட்டு ஈடுபாட்டில் இருந்த கர்ணன் 'தோற்கப் போகிறாய் என்று தெரிந்து எழுந்து விட்டாயா?' என்று கேட்டவாறே அவள் புடைவைத் தலைப்பைப் பற்றி இழுத்தான். இழுத்த வேகத்தில் அவள் மேகலை அறுபட்டு முத்துகள் தரையில் அங்கும், இங்கும் சிதறி ஓடின. கர்ணன் முகம் நிமிர்ந்தான். துரியோதனன் பக்கத்தில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். 'தவறாக எண்ணி விடுவானோ?' என்று பதைபதைத்தான்.

பானுமதியும் பயம் கொண்டாள். ஆனால், துரியோதனனோ குறுநகை புரிந்தான். 'சிதறிய முத்துகளை எடுக்கட்டுமா, இல்லை கோர்க்கட்டுமா' என்று கேட்டபடி உருண்ட முத்துகளை ஒவ்வொன்றாக கையில் எடுத்தான். மேகலை அறுந்து சிதறியது. மேலான நட்போ மேலும் இறுகியது! சோக்ரடீஸ் சொல்கின்றார். நட்பு கொள்வதில் நிதானமாக இருங்கள். ஆனால், நட்பு கொண்டபின் அதில் உறுதியாகவும், நிலையாகவும் நில்லுங்கள். பன்னிரண்டு ஆழ்வார்கள் பரந்தாமனைப் பாடி மகிழ்ந்தார்கள். அதே கண்ண பெருமானைக் கவியரசர் பாரதியார் பலவகை பந்தங்களில் அனுபவித்து அகம் மகிழ்ந்தார். கண்ணன் என் சற்குரு, தாய், தந்தை, அரசன், காதலி, குழந்தை என்று பன்முகப் பரிமாணங்களில் பாடி அனுபவிக்கும் மகாகவி 'கண்ணன் என் தோழன்' என்பதற்கே கண்ணன் பாட்டுக் காவியத்தில் முதன்மை அளித்தார்.

**'பிழைக்கும் வழி சொல்ல வேண்டுமென்றால்**
**ஒரு பேச்சினிலே சொல்லுவான்!**
**உழைக்கும் வழி, வினை ஆளும் வழி,**
**பயன் உண்ணும் வழி உரைப்பான்!**
**அழைக்கும் பொழுதினில் போக்குச் சொல்லாமல்**
**அரைநொடிக்குள் வருவான்!**
**மழைக்குக் குடை! பசிநேரத்து உணவு!**
**என்றன் வாழ்வினுக்குக் கண்ணன்!**

இவ்வாறு தோழமை உணர்வைத் துல்லியமாகக் காட்டுகிறார் பாரதியார். தினம் தினம் பலபேர் நம் வாழ்வில் வந்து போவார்கள். ஆனால், நல்ல நண்பர்கள் மட்டுமே நம் நெஞ்சத் தடத்தில் பாதச் சுவடுகளைப் பதித்துச் செல்வார்கள். அதைத் தேர்ந்து தெளிந்து நாம் நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் வசதியில் திளைக்கும்போது பலர் நண்பர்களாக இருப்பார்கள். நாம் துன்பத்தில் உழலும் போது யார் நண்பர்கள் என்று நமக்குத் தெரிந்துவிடும்.

மனைவி கடவுள் தந்த வரம். தாய் கடவுளுக்கு நிகரான வரம். நண்பன் கடவுளும்கூட போற்றி மகிழும் வரம். நாம் ஏழ்மைக் குடும்பத்திலோ, செல்வச் செழிப்பிலோ அல்லது நடுத்தரக் குடும்பத்திலோ பிறக்கலாம். அது நம் விதி.

ஆனால், நல்ல நண்பர்களை உருவாக்குவது நம் மதி. நட்பின் மூலம் நாம் வாழ்வில் உயர்நிலையை அடையலாம். இது தான் விதியை மதியால் வெல்லலாம்! என்பது.

# செய்தித்துளிகள்

## போலியான தகவல்கள் வெளியிட்ட நபர் கைது

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொடர்பில் போலியான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட நபர் ஒருவர் நேற்றிரவு வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

60 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (நி-4)

## பொலிஸ் அதிகாரிகளின் விடுமுறை ரத்து

(கொழும்பு)

உடன் அமுலுக்கு வரும் வகையில் அனைத்து தர பொலிஸ் அதிகாரிகளினதும் விடுமுறை மறு அறிவித்தல் வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சூழ்நிலையை கருத்திற்கொண்டு பதில் பொலிஸ்மா அதிபரினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

## துறைமுக ஊழியர்கள் சிலர் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் ஜெயா கொள்கலன் முனையத்தின் 17 ஊழியர்களை தனிமைப்படுத்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ள, கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி-4)

## ஒரு நாள் சேவை இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஒருநாள் சேவை நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளை, நாளை மறுதினம் மற்றும் எதிர்வரும் ஒன்பதாம் திகதிகளில், ஒருநாள் சேவை நடவடிக்கை முன்னெடுக்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா அச்ச நிலைமையை கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 110 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 160 | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 170 | 200 | 200 |
| தக்காளி | 180 | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 |
| கோவா | 100 | 120 | 120 | 140 |
| கரட் | 120 | 180 | 200 | 200 |
| பூசணி | 60 | 80 | 90 | 80 |
| புடோல் | 80 | 130 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 90 | 80 | 120 |
| சின்னவெங்காயம் | 200 | 180 | 200-220 | 240 |
| பெரியவெங்காயம் | 150 | 180 | 180 | 180 |
| பாகற்காய் | 200 | 280 | 140 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 120 | 130 | 80 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 90 | 100 | 100 |
| கறிமிளகாய் | 250 | 280 | 260 | 300 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 120 | 80 |
| போஞ்சி | 200 | 240 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 60 | 40 |
| தேசிக்காய் | 80 | 80 | 100 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 300 | -- | -- |
| வெங்காயப்பூ | 200 | 240 | -- | -- |
| முள்ளங்கி | 60 | 80 | 70 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |



# சிறுவர் அரங்கம்

## தொலைக்காட்சி பார்ப்பதிலுள்ள நன்மை, தீமைகள்



உலகிலுள்ள ஒவ்வொருவரும் தினசரி விடயங்களை அறிந்து கொள்ள உதவும் தொடர்பு சாதனங்களில் தொலைக்காட்சியும் ஒன்றாகும்.

தற்போதைய நிலையில் தொலைக்காட்சி இல்லாத வீடுகளே இல்லை. எல்லா வீடுகளிலும் தொலைக்காட்சிகள் காணப்படுகின்றன.

வீடுகளில் இருந்தவாறே உலகிலுள்ள அனைத்து விடயங்களையும் அறிந்துகொள்ள உதவும் இருவழி ஊடகமாக தொலைக்காட்சி காணப்படுவது சிறப்பம்சமாகும்.

சிறுவர்களுக்குப் பொருத்தமான குட்டிச் சுட்டி நிகழ்வுகள். விளையாட்டுக்கள். பொது அறிவு விடயங்கள் போன்றனவற்றை வெளிப்படுத்தும் சிறந்த ஊடகமாக தொலைக்காட்சி காணப்படுவது நன்மையளிக்கின்றது.

அதேவேளை தொடர் நாடகங்கள், வீரதீரக் கதைகள் போன்றன சமூக கலாசாரப் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இவற்றில் மக்கள் ஆழமாக உள்வாங்கப்படுவதால் சமூகப் பாதிப்புக்களை எதிர்நோக்கிச் செல்கின்றமை கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.

இவற்றைப் பார்க்கும் போது தொலைக்காட்சி மூலம் நன்மைகளும் ஏற்படுகின்றன. அதேவேளை தீமைகளும் ஏற்படுகின்றன. இதனால் **“நீரினை நீக்கிப் பால் அருந்தும் அன்னப் பறவை போல”** நாம் இருவழி ஊடகமான தொலைக்காட்சியில் நல்ல விடயங்கள் பலவற்றைப் பெற்றுப் பயன்களைப் பெறுவோமாக.

ச.கதீசன்
தரம்-06A
யாழ். இந்துக் கல்லூரி

### வாசிப்பு மாதம் ஒக்டோபர்-2020

## மருத்துவப் பழமொழிகள்

❖ முலைப்பால் சுரக்க கருஞ்சீரகத்தை அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்க
❖ சுண்ணாம்புச் சத்துக்கு முருங்கைக்கீரை
❖ அப்பிள் சத்தும் எலுமிச்சம் பழச்சத்தும் தக்காளிப் பழத்தில் உள்ளது
❖ தாது பலத்திற்கு கொத்த மல்லிக்கீரை; தாது நட்டத்தை தடுக்க முருங்கைப் பிஞ்சு
❖ கோழைக்கட்டுக்கு கோவைக்கிழங்கு; கோபத்தைத் தடுக்க தூதுவளைக் கீரை
❖ ஜீரணத்திற்கு வெற்றிலை போட வேண்டும்; அஜீரணத்திற்கு ஓமத்தைத் தின்ன வேண்டும்
❖ வேப்பங் கொழுந்தும் நிலவேம்புக் கஷாயமும் வேதனை தரும் குளிர் சுரத்திற்கு தடுப்பு
❖ வேம்பின் வேரும் பட்டையும் கஷாயமிட்டுப் பருகினால் வியாதிகள் பல வராமல் தடுக்கலாம்
❖ வெண்பூசணிக்காய் உண்ண பித்தமொடு காய்ச்சல் கண்ணெரிச்சல் போம்
❖ இரத்தக் கொதிப்பிற்கு வெள்ளைப் பூண்டு; இருமலுக்கு வசம்பு
❖ மலச்சிக்கலுக்கு மா மருந்து வில்வ இலைகள்

தொகுப்பு: புத்தூர் பொது நூல் நிலையம்

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## குடி உயரக் கோன் உயரும்

90



பழங்காலத்து அலங்காரங்கள்

குளித்துவிட்டு மரக்கட்டைச் செருப்பை அணிந்து வந்து வீட்டுக்குள் வந்தார்கள். அச்செருப்பில் பொன் ஆணி பதிக்கப்பட்டிருந்தது.

விருந்தினர்கள் வீட்டுக்கு வந்தவுடன் அவர்களுக்கு வெற்றிலை, பாக்கு கொடுக்கப்பட்டது. பிராமண விருந்தினர்களுக்குப் பொன் தட்டில் உணவு பரிமாறப்பட்டது.

தினமும் காலையில் எழும்போது கடுக்காய், நெல்லி, தான்றிப் பழங்கள் ஆகிய மூன்றும் சேர்ந்து ஊறிய தண்ணீரால் கண்களைக் கழுவிக் கொள்ளும் பழக்கம் மேட்டுக்குடியினரிடம் இருந்தது.

இசை நூல், நாட்டிய நூல், சித்தர் ஆருட நூல், விஷ வைத்திய நூல் போன்ற நூல்களை அதிகமாக மக்கள் படித்தார்கள்.

நாவிதர் இரும்பும் எஃகும் சேர்ந்த சவரக் கத்திகளைப் பயன்படுத்தினர். சங்ககாலத்தில் பிணங்கள் புதைக்கப்பட்டன.

ஆனால் ராஜராஜன் காலத்தில் பிணங்கள் எரிக்கப்பட்டன. தற்கொலைக்கு முயற்சிப்பவர்கள் பெரும்பாலும் மலையிலிருந்து குதித்து உயிர் விட்டார்கள்.

### அலங்காரம்

ராஜராஜன் காலத்தில் ஒப்பனை செய்வது ஒரு கலையாகப் பாவிக்கப்பட்டது. மக்கள் தங்களை ஒப்பனை செய்வதில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள்.

உயர்ந்த குலப்பெண்கள் நறுமணப் பொருட்கள் கலந்த நீரில் நீராடியிருக்கிறார்கள். கண்ணுக்கு மை பூசி, மார்பில் குங்குமக் குழம்பைப் பூசிக் கொள்ளும் பழக்கம் இருந்தது.

விரல்களுக்கும் பாதங்களுக்கும் செம்பஞ்சுக் குழம்பைத் தடவிக் கொண்டார்கள். மல்லிகை மாலைகள், தமிழ் எழுத்துக்கள் வடிவில் செய்யப்பட்டன.

மணப்பெண்கள், கற்பூர மாலை, தீம்பு மாலை, பூந்தாமம், மணிமாலை என்று நிறைய விதங்களில் மாலைகள் சூடிக் கொண்டார்கள்.

நவமணிகள் பதிக்கப்பட்ட அணிகலன்களை அணிந்தார்கள். நெற்றியில் சூட்டு, காதுகளில் மகரக்குழை, கழுத்தில் முத்துமாலை, பிறை வடம், நட்சத்திர மணி மாலை, வலம்புரி முத்துக்கள் கோர்த்த வடம், மாணிக்கத் தாலி ஆகியவற்றை அவர்கள் அணிந்து கொண்டு, மிகுந்த அலங்காரத்துடன் காணப்பட்டார்கள்.

(தொடரும்)

> நாம் வாழ்வதற்கு நன்றாக இருக்க வேண்டியவை மூன்று. அவை: நம் உள்ளம், உடம்பு, சுற்றுப்புறம்.
> – டாக்டர் மு. வரதராசனார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனா முற்றாக இல்லாதவரை வடபகுதிக்கு ஆபத்து இருக்கவே செய்யும்

கம்பஹாவில் இனங்காணப்பட்ட கொரோனா சமூகத் தொற்று எல்லை கடந்து போவதை அவதானிக்க முடிகிறது.

ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று நாடு முழுவதையும் நடுங்க வைத்துள்ளதெனில், நிலைமை எவ்வாறாக அமையப் போகிறதென்பதை ஊகிப்பதில் கடினம் இருக்க முடியாது.

எதுஎவ்வாறாயினும், இலங்கையின் எந்தப் பகுதியில் கொரோனாத் தொற்று ஏற்பட்டாலும் அதன் முதலாவது ஆபத்துப் பிரதேசமாக வடபகுதி உண்டென்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

இவ்வாறு தென்பகுதியில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று மறுகணமே வடபகுதியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறதெனும்போது, தென்பகுதியின் ஊடாட்டம் வடக்கில் அதீதமாகி விட்டதென்பதை உணர முடியும்.

ஆம், தென்பகுதியிலிருந்து வடக்கு நோக்கி வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் போகிறது.

ஏதோவொரு பலமான அமைப்பு, சிங்கள மக்களை வடபகுதிக்குச் சென்று வாருங்கள் என அனுப்பி வைப்பது போல, தென்பகுதி மக்களின் வடக்குச் சுற்றுலா அமைகிறது.

இதுதவிர, வடபுலத்தில் கடமையாற்றும் முப்படையினரும் அடிக்கடி தென்பகுதிக்குச் சென்று வருவதுடன் வடபகுதி முழுவதிலும் படைத்தரப்பின் நடமாட்டம் அதிகரித்துமுள்ளது.

இதற்கு மேலாக, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கற்கின்ற சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைத் தாண்டி நிற்கின்றது.

இந்நிலையில் சிங்கள மாணவர்களின் யாழ்ப்பாண வருகையும் அவர்களைத் தொடர்ந்து அவர்களது பெற்றோர்கள், உறவுகளின் யாழ்ப்பாணப் பயணமும் சேர்ந்து கொள்கிறது.

இவற்றைக் கடந்து, வடபகுதியைச் சேர்ந்தவர்கள் தென்பகுதியில் கடமையாற்றுவது காரணமாகவும் தெற்கில் ஏற்படக்கூடிய கொரோனாத் தொற்று, காற்று வேகத்தில் வடபகுதியை வந்தடைகிறது.

எனவே இதுவிடயத்தில் வடபகுதி மக்களாகிய நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

தவிர, கொரோனாத் தொற்று அபாயம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் தெற்கிலிருந்து வடக்குக்கான அவசியமற்ற பயணங்களைத் தவிர்ப்பது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதும் காலத்தின் உடனடித் தேவையாகும்.

## நீண்ட காலமாக தலைமறைவாகியிருந்த
# வழிப்பறிக் கொள்ளைகளுடன் தொடர்புடைய இருவர் யாழ்.மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீண்ட காலமாக பல்வேறு கொள்ளை மற்றும் வழிப்பறி சம்பவங்களில் ஈடுபட்டு வந்த கொள்ளை கும்பலை யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இருபாலை மற்றும் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த இருவரே நீண்ட காலமாக தலைமறைவாக இருந்த நிலையில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய், காரைநகர், கொடிகாமம், சாவகச்சேரி, காங்கேசன்துறை, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பொலிஸ் நிலையங்களில் சந்தேக நபர்கள் இருவருக்கும் எதிராக பெரும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் முறைபாடுகள் உள்ளன.

சந்தேக நபர்கள் இருவரிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களால் கொள்ளையிடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டதும் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## போதியளவு பொருட்கள் கையிருப்பில் உள்ளன
### யாழ்.வணிகர் கழகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் போதியளவு அத்தியாவசியப் பொருட்கள் கையிருப்பில் உள்ளன. பொதுமக்கள் தேவையற்ற வகையில் பொருட்களை கொள்வனவு செய்து செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம்" என்று யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்ததாவது,

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் சமூகத் தொற்றாக மாறியுள்ள நிலையில் மக்கள் சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும். இது மட்டுமன்றி சமூகத் தொற்று காரணமாக நாடு முடக்கப்படும் என்ற சந்தேகத்தினால் அத்தியாவசியப் பொருட்களை அதிகளவாக கொள்வனவு செய்கின்ற நிலையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இந்த நடவடிக்கை தேவையற்ற ஒன்று. யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தற்போதைய சூழலில் தேவையான அளவு அத்தியாவசியப் பொருட்கள் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் கையிருப்பில் உள்ளன. அது மட்டுமன்றி கொழும்பிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துவரப்படுகின்றன.

ஆகையால் தேவையற்ற முறையில் பொருட்களை கொள்வனவு செய்து தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம்.

அது மட்டுமன்றி ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் பொருட்களை வீடுகளுக்கு கொண்டு சென்று விநியோகிப்பதற்கும் திட்டத்துக்கும் வர்த்தகர்கள் தயாராகவே உள்ளனர்.

அத்தோடு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேசங்களிலும் உள்ள மக்களுக்கும் அங்குள்ள பிரதேச வர்த்தகர்களூடாக பொருட்களை விநியோகிப்பதற்கான திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம். எனவே தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம்.

இதேவேளை, அரசினால் இறக்குமதிக்கு தடை செய்யப்பட்ட பொருட்களே கூடிய விலையில் விற்பனையாகின்றன. விலை ஏற்றம் வர்த்தகர்களால் ஏற்பட்டதல்ல. இறக்குமதியாளர்களால் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு அரசுதான் தடையை நீக்க வேண்டும் என்றார். (ம-3)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் - சபாநாயகர் சந்திப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சைபி சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் சந்தித்து கலந்துரையாடினார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் அரசியல் தூதுவருடன் வர்த்தகம் மற்றும் தொடர்பாடல் துறைக்கான பிரதித் தலைவர் அன்னே வாகியர் சட்டர்ஜியும் கலந்து கொண்டிருந்தார்.

இலங்கையின் சமகால நடவடிக்கைகள் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவும் இணைந்து கொண்டிருந்தார். (ம-3)

## கொரோனா தொற்று தொடர்பில் மக்கள் அச்சமடைய வேண்டாம்
### பிரதமர் மகிந்த வேண்டுகோள்

(கொழும்பு)

கொரோனா தொற்றின் சமீபத்தைய பரவல் தொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொறுப்புடனும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக டுவிட்டரில் பதிவொன்றினை பகிர்ந்துள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, இந்த தொற்றினைக் கட்டுப்படுத்த சுகாதார அதிகாரிகள், அரசாங்கம், பொலிஸார் மற்றும் முப்படையினர் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## ரவீந்திரநாத் தாகூரின் ஆன்மீகச் சிந்தனைகள்
### குழந்தைகளிடம் கற்றுக் கொள்ளுங்கள்

❖ இறைவனை மனக்கண்ணில் காணும் போது என்னிடமுள்ள தீமைகள் யாவும் நெஞ்சத்திலிருந்து விலகி விடுகின்றன.

❖ எப்போதும் மனதை எளிமையாகவும், தூய்மையாகவும், அமைதியாகவும் வைத்திருக்க விரும்புங்கள். நாம் மகிழ்ச்சியாக வாழவேண்டுமானால், நம் மனப்போக்கினை ஆளக்கற்றுக் கொள்ள வேண்டும்.

❖ மனிதனுக்கு நேயஉணர்வு அவசியம். எப்படி தன்னிடம் உள்ள பழுத்த பழங்களை மரம் பிறருக்காக கொடுக்கிறதோ, அதுபோல ஒவ்வொருவரும் தன்னிடம் உள்ளதை பிறருக்கு கொடுக்கும் குணமுடையவர்களாக இருக்க வேண்டும்.

❖குழந்தைகளைப் போன்று இருக்க கற்றுக் கொள்ளுங்கள். குழந்தைகள் பயன் இல்லாத விளையாட்டுப் பொருள்களை வைத்துக் கொண்டு உள்ளம் மகிழ்ச்சி கொள்கின்றனர். மகிழ்ச்சி என்பது பொருள் சார்ந்தது அல்ல. மனம் சார்ந்ததே.

❖ சிரத்தை இல்லாமல் வழிபாடு செய்வதால் பயன் ஏதும் இருக்காது. தெய்வம் நம்முன்னே உறைந்து இருக்கிறது என்ற எண்ணமுடன் வழிபட வேண்டும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**உள்ளத்தில் அன்பு நிரம்பி வழிந்தால் உதட்டிலும் அதன் இனிமையைக் காணமுடியும். எப்போதும் பேச்சு நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதாக உற்சாகத்துடன் அமையட்டும்.**

-பரமானந்தா

## ஆன்மீகச் சிந்தனைகள்
### திருப்தியுடன் வாழப்பழகுங்கள்

❖ போதும் என்ற திருப்தி உண்டாகி விட்டால் மகிழ்ச்சி என்னும் மாளிகையின் கதவு திறந்து விடும்.

❖ வியாதி தீர பத்தியம் இருப்பது போல, தெய்வீக வழியில் நடப்பவன் ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும்.

❖ நாம் இதுவரை முன்னேறாமல் இருப்பதற்கு காரணம், நல்லவர்களோடு பழகாமல் இருப்பதே. மூ சந்தேக புத்தி மனிதனை கெ?ன்று விடும். இதை விடக் கொடிய எதிரி வேறு யாரும் கிடையாது.

❖ ஏழை, பணக்காரன் என்று பாகுபாடு பார்ப்பது கூடாது. எல்லா உயிரிலும் வீற்றிருப்பவர் ஒரே கடவுளே.

# வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது செம்மலை உதயசூரியன் அணி



(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையோடு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் மாலை வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இறுதிப் போட்டியில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி முல்லைநகர் சென்யூட் விளையாட்டுக்கழக அணிகள் மோதின். இதில் 1:0 என்ற கோல் அடிப்படையில் செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் சம்மேளனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான பந்துகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்தோடு இறுதிப் போட்டியில் வெற்றியீட்டிய அணிகளுக்கான வெற்றிக்கேடயங்களும் சிறந்த ஆட்டநாயகன், சிறந்த கோல் காப்பாளர் ஆகியோருக்கான வெற்றிக்கேடயங்களும் விருந்தினர்களால் வழங்கப்பட்டன. (4-281)

# மென்பந்து துடுப்பாட்ட தொடர் சங்கானை உதயதாரகை சம்பியன்

நவாலி star கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய மென்பந்து தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நவாலி அட்டகிரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சங்கானை உதய தாரகை அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் அணியினர் மோதினர்.

போட்டியின் நாணயற்சுழற்சியில் வெற்றி பெற்ற ஞான முருகன் அணியினர் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தனர்.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை உதயதாரகை அணியின் ஆரம்ப வீரர்களான சூரி மற்றும் தினேஸ் களமிறங்கி வேகமாக ஓட்டங்களை பெற்ற போதிலும் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலைமையில் இருந்த போதிலும் டயான் சன் - சிவா ஜோடியின் இறுதிநேர அசத்தல் ஆட்டம் கைகொடுக்க 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களை பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞானமுருகன் அணியினர் ஜிந்துசன் மற்றும் தினேஸ், டயான்ஷன்,சூரி ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சில் ஞானமுருகன் அணியினரால் 43 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது.

இதனால் 11 ஓட்டங்களால் சங்கானை



உதயதாரகை அணி வெற்றியை தம்வசம் ஆக்கியது. போட்டியின் ஆட்டநாயகனாக ஜிந்துசன் தெரிவானார். தொடரின் நாயகனாக சகல துறையிலும் ஜொலித்த சூரி தெரிவானார். (4)

# வடமாகாண பளுதூக்கல் போட்டி வவுனியா மாணவிகள் சாதனை



2020ம் ஆண்டுக்கான வடமாகாண பளுதூக்குதல் போட்டியில் வவுனியா மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் 59 கிலோ எடைப்பிரிவில் 112 கிலோ தூக்கி நி. சுஸ்மிதாகினி 1ம் இடத்தையும், 49 கிலோ எடைப்பிரிவில் 88 கிலோ தூக்கி ச.நிதர்ஷினி 2ம் இடத்தையும், 81 கிலோ எடைப்பிரிவில் 74 கிலோ தூக்கி இ. கஜனிகா 3ம் இடத்தையும் பெற்றுள்ளனர். ஞானஜீவன் ஆசிரியர் இவர்களிற்கு பயிற்சியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-299)

# விக்கெட் கீப்பராக 100 கட்ச் டோனி சாதனை

ஐ.பி.எல். போட்டி தொடரில் சி.எஸ்.கே. அணி கப்டன் எம்.எஸ்.டோனி விக்கெட் கீப்பராக 100 கட்சுகள் பிடித்து சாதனை படைத்துள்ளார். ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி கள் ஐக்கிய அமீரகத்தில் நடந்து வருகின்றன. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கப்டன் எம்.எஸ். டோனி புதிய சாதனை படைத்துள்ளார்.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு எதிராக நடந்த போட்டியில் பஞ்சாப் அணி கப்டன் ராகுல் அடித்த பந்து பின்னால் நின்றிருந்த டோனி கைக்குச் சென்றது. இதனால் 99 கட்சுகள் பிடித்திருந்த டோனி தனது 100ஆவது கட்சை பிடித்து சாதனை படைத்துள்ளார். இதனால், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் கப்டன் தினேஷ் கார்த்திக் நிகழ்த்திய சாதனைக்கு அடுத்த இடத்தில் டோனி உள்ளார். இது தவிர டோனி 39 ஸ்டம்பிங் குகளையும் செய்துள்ளார். (4)

# பின்வாங்கியது பெங்களூர் வெற்றி பெற்றது டெல்லி




ஐ.பி.எல்.தொடரின் 19-வது லீக் ஆட்டம் டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் - டெல்லி கப் பிட்டல்ஸ் அணிகள் மோதின. ஆர்.சி.பி. அணி டொஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி டெல்லி அணியின் பிரித்வி ஷா, ஷிகர் தவான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். சிறப்பான தொடக்கத்தை அளித்த பிரித்வி ஷா, ஷிகர் தவான் ஜோடி பெங்களூர் அணியின் பந்து வீச்சை சிதறடித்தனர்.

அதிரடியாக ஆடிய பிரித்வி ஷா 23 பந்தில் 5 பவுண்டரிகள், 2 சிக்சர்கள் உட்பட 42 ரன்கள் விளாசி சிராஜ் பந்து வீச்சில் வெளியேறினார். அதே போல் மற்றொரு வீரரான ஷிகர் தவான் 28 பந்தில் 32 ரன் குவித்து உடானா பந்து வீச்சில் அவுட் ஆனார். அடுத்துவந்த ஷ்ரேயாஸ் ஐயர் 11 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

4-வது விக்கெட்டுக்கு ரிஷப் பண்ட் உடன் மார்கஸ் ஸ்டொய்னிஸ் ஜோடி சேர்ந்தார். ஸ்டொய்னிஸ் தொடக்கத்தில் இருந்து அதிரடி காட்டினார்.

25 பந்தில் 3 பவுண்டரில் 2 சிக்சர் உட்பட 37 ரன்கள் எடுத்த நிலையில் பண்ட் அவுட் ஆகி வெளியேறினார். ஆனால் மறுமுனையில் தொடர்ந்து அதிரடியாக ஆடிய மார்கஸ் ஸ்டொய்னிஸ் 26 பந்துகளில் 6 பவுண்டரிகள், 2 சிக்சர்கள் உட்பட 53 ரன்கள் குவித்து இறுதி வரை களத்தில் இருந்தார்.

இதனால், டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 196 ரன்கள் குவித்தது. பெங்களூர் தரப்பில் சிராஜ் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து, 197 ரன்கள் வெற்றி என்ற இலக்குடன் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் படிக்கல், ஆரோன் பிஞ்ச் ஆகியோர் தொடக்க வீரர்களாக களமிறங்கினர்.

4 ரன்கள் எடுத்த நிலையில் அஸ்வின் பந்து வீச்சில் படிக்கல் ஆட்டமிழந்தார். அதேபோல் 13 ரன்கள் எடுத்த நிலையில் அக்சர் பட்டேல் பந்து வீச்சில் ஆரோன் பிஞ்ச் வெளியேறினார்.

அடுத்துவந்த கப்டன் விராட் கோலி சற்று நிலைத்து நின்று ஆடி 43 ரன்கள் எடுத்த நிலையில் ரபாடா பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த வீரர்கள் ரபாடாவின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினர்.

இறுதியில், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 137 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால், டெல்லி கப்பிடல்ஸ் அணியிடம் 59 ரன்கள் வித்தியாசத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி படுதோல்வியடைந்தது. (4)

## குளத்தில் குளித்த...

நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பானுசன் என்ற 11 அகவையுடைய சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

பாடசாலை விடுமுறை காரணமாக வள்ளிபுனத்தில் உள்ள உறவினர்களின் வீட்டிற்கு சென்ற சிறுவன் ஏனைய சிறுவர்களுடன் சேர்ந்து நாவல்பழம் பிடுங்குவதற்காக சென்றுள்ளான்.

நாவல்பழம் பிடுங்கி சாப்பிட்டுவிட்டு இடைக்கட்டு குளத்தில் குளிக்க சென்ற வேளை நீரில் மூழ்கி தத்தளித்துள்ளான்.

சம்பவம் தொடர்பில் குறித்த சிறுவனுடன் சென்ற ஏனைய சிறுவர்கள் அயலவர்களுக்கு தகவல் கொடுத்ததை அடுத்து அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்ட சிறுவன் மூங்கிலாறு ஆதார மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அங்கு உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சிறுவனின் உடலம் மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

## பரீட்சைகள்...

கெஹலிய ரம்புக்வெல கருத்து வெளியிட்டுள்ளார்.

இதனடிப்படையில் இன்றைய தினம் வெளியாகவுள்ள பிசிஆர் பரிசோதனைகளின் முடிவுகளை அடிப்படையாக கொண்டு குறித்த பரீட்சைகள் தொடர்பான இறுதி தீர்மானத்தை கல்வி அமைச்சு எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் வைத்து அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும், இதனடிப்படையில் எதிர்வரும் 48 மணித்தியாலங்கள் மிகவும் தீர்மானமிக்கது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

## வயோதிபர்...

மாக மீட்கப்பட்டுள்ளார்.

61அகவையுடைய சண்முகம்நல்லையா என்ற வயோதிபரே நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார், திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.சற்குணதாஸ், கிராம சேவகர் ஆகியோர் முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-3)

## இணுவிலில் வன்...

இடம்பெற்றுள்ளது.

கடந்த 26ஆம் திகதி யாழ்ப்பாணம் நகர் பெருமாள் கோயிலடியில் மானிப்பாயைச் சேர்ந்த இளைஞரை வாளால் வெட்டிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் சரணடைந்த நிலையில் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் குறித்த நபரின் வீட்டில் வன்முறைக் கும்பல் ஒன்றால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## யாழ்ப்பாண குடா...

லான நிலைமையில் எதிர்கொள்ளும் பாரிய ஒரு அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

யாழ்பாண மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனையில் யாராவது ஒருவருக்கு தொற்று இனங்காணப்பட்டால் எதிர்வரும் நாட்களில் சில மாற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டி வரும். சில பிரதேசங்களை முடக்க வேண்டிய தேவையும் ஏற்படும் என அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ம-3)

## வீடு புகுந்து...

நடத்தியுள்ளது.

இணுவில் துரை வீதியில் உள்ள வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி 10 நிமிடங்களின் பின் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

உடுவில் மல்வத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் அளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## யாழின் அபாய...

களைச் சேர்ந்த 3915 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் வேலணை பிரதேசத்தில் 57 பேரும் குடாரப்பில் 82 பேரும் எழுவைதீவில் 22 பேரும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

மேலும் கொரோனா தொற்றுக்குள்ளான புங்குடுதீவுப் பெண் நெடுந்தீவுக்கு சென்று வந்துள்ள நிலையில், அவர் பயணித்தபோது அவருடன் சேர்ந்து பேருந்து மற்றும் படகில் பயணித்த 88 பேரை அடையாளம் காணும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் புங்குடுதீவில் 1212 குடும்பங்களை சேர்ந்த 3915 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் அபாய பிரதேசமாக அடையாளப்படுத்தப்படும் புங்குடுதீவு பிரதேசம் முற்றாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.மாவட்டம் அபாய பிரதேசமாக அறிவிக்கப்படாதபோதும் மிக சிக்கலானதொரு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எனவே மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாக கரையோர பகுதி மக்கள் யாழ்.சமூகத்தின் நன்மைக்காகவும் உங்கள் குடும்பத்தின் நன்மைக்காகவும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை அடையாளம்காட்ட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (ம-3)

## காய்ச்சல் உள்ளி...

குடும்பத்தினரும் எங்கு வசிப்பது என்பதைப் பொருட்படுத்தாமல் வீட்டில் தங்கியிருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்ட பணியாளர்களின் குடும்பத்தினர் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களுக்கு அனுப்பி வைக்கும் பணி முன்னெடுக்கப்படுகிறது என்று அரசு தெரிவித்துள்ளது. (ம-3)

## கூட்டங்கள்...

வெளிப்புற நிகழ்வுகள், திருவிழாக்கள், இசை நிகழ்ச்சிகள், மதக் கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் போன்ற பொதுக் கூட்டங்களுக்கு மேலதிக அறிவிப்பு வரும் வரை நடத்தக் கூடாது என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய கொரோனா சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு, இந்த அறிவித்தல் சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கொரோனா வைரஸ் மேலும் பரவுவதை குறைக்க கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, விழிப்புடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## 832...

மினுவாங்கொட தொழிற்சாலையில் பணியாற்றிய திவுலப்பிட்டியை சேர்ந்த பெண்ணொருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதை அடுத்து, அவர் பணியாற்றிய தொழிற்சாலையிலுள்ளவர்களுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணுடன் மினுவாங்கொட தொழிற்சாலையில் கடமையாற்றி வந்த 832 பேரே இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று இரவு வரை மாத்திரம் 739 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ம-3)

## நாவலர் வீதியில்...

யளவில் யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள புகையிரதக் கடவையில் இடம்பெற்றுள்ளது.

யாழிலிருந்து கொழும்பு நோக்கிச்சென்ற கடுகதி புகையிரதத்துடன் மோதுண்டே 65 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் யார் என்று இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பான மரண விசாரணைகளை யாழ்.போதனாவின் திடீர் மரண விசாரண அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## புங்குடுதீவு யுவதி...

யில் பணிபுரிந்த புங்குடுதீவு யுவதிகள் இருவர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

அவர் கடந்த 3ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்ததாக வடக்கு சுகாதார திணைக்களம் அறிவித்திருந்தது.

எனினும், அவர் கடந்த 26ஆம் திகதியும் யாழ்ப்பாணம் வந்துள்ளார். யாழ் வந்த பின்னர் அவருக்கு நிச்சய தார்த்தம் நடைபெற்றதாக, சுகா 02






























## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பொக்கன் வீதியில் 6 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு

1 1/2 பரப்புக்களாக பிரித்துக் கொடுக்கப்படும்.

(காணி முன்பகுதி பரப்பு 6 இலட்சம் பின்பகுதி பரப்பு 5 இலட்சம்)

இராச வீதி கல்வியற் கல்லூரிக்கு அருகாமையில்

இராச வீதியிலும் காணி உள்ளது.

( மதியம் 12.30 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும் )

(4399)

தொடர்பு - குரு

**077 468 3354**

**076 221 2037**

## வீடு வாடகைக்கு

கொக்குவிலில் வீடு வாடகைக்கு உண்டு.

(C-488)

தொடர்பு

**077 004 4386**

## உடனடி வேலை வாய்ப்பு

### கணக்கு உதவியாளர்

நிறுவனம் தொடர்பாக போக்குவரத்து செய்யக்கூடியவரும் கணக்கியல் சார்பான போதிய அறிவும் அனுபவமும் இருத்தல் அவசியம்.

(C-308)

சம்பளம் 30'000/=

(40 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

**777 069 777**

# 4 பொலிஸ் பிரிவுகளில் மட்டுமே கம்பஹாவில் ஊரடங்கு

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில் மேலும் 12 பொலிஸ் பிரிவுகளில் நேற்று மாலை 6 மணிக்கு நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று விடுத்த அறிவிப்பை பொலிஸ் தலைமையகம் மீளப்பெற்றுள்ளது.

கம்பஹா, கிரிண்டிவெல, தோம்பே, பூகோட, வீரகுல, கனேமுள்ள, வெலிவேரிய, மல்வத்முகிரிபிட்டிய, நிட்டம்புவ, மீரிகம, பல்லேவெல மற்றும் யக்கல ஆகிய பொலிஸ் பிரிவுகளிலேயே இவ்வாறு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப் படுகிறது.

இந்த நிலையில் கம்பஹா தவிர்ந்த ஏனைய 11 பொலிஸ் பிரிவுகளிலும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மினுவாங்கொட, திவுலப்பிட்டிய மற்றும் வெயாங்கொட பொலிஸ் பிரிவுகளில் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு கம்பஹா பொலிஸ் பிரிவிலும் நேற்று மாலை 6 மணி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. (ம-03)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623

(4393)

## மணமகள் தேவை

07.05.1987 இல் பிறந்தவரும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு, பட்டம் பெற்றவரும் அரச உத்தியோகத்தில் உள்ளவருமான மணமகள் தேவை.

மணமகன் பற்றிய விபரங்கள் வருமாறு

தொழில் : அபிவிருத்தி உத்தியோகத்தர் (தரம் - II)

ராசி : மகம் லக்கினம் : சிம்மம்

கிரகநிலை : இரண்டில் செவ்வாய்

தரகர் தேவையில்லை.

(4387)

**தொடர்பு : 021 224 2699**

## அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பம் 08-10-2020

நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஷ்டசாலி ஆகலாம்.

இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட

உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்

என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS

(C-308)

**0768226244**

## வேலை வாய்ப்பு

### பயிற்சியுடன் கூடிய உடனடி வேலைவாய்ப்பு

குறைந்தபட்சம் A/L சித்தியடைந்திருத்தல்.

விற்பனை முகாமையாளர் – ஆண், பெண்

Computer Typist – பெண்

கணக்காளர் – பெண் ( கணனி அறிவுடையோர் )

(4391)

தொடர்புகளுக்கு

**077 038 5584**

## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1250/=

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

லண்டன்-1050/= , பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலன்ட் - 1150/=

கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது (C-478)

இந்தியா – டுபாய் – சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

| | | | | |
|---|---|---|---|---|
| 976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | 355, A9 வீதி கந்தசுவாமிகோவிலடி கிளிநொச்சி | சங்கானை நெல்லியடி சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கனகராயன்குளம் மல்லாவி /துனுக்காய் மன்னார்/வவுனியா |

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

பிரான்ஸ் / ஜெர்மனி நெதர்லாந்து / சுவிஸ் 1150 /= Kg

**0768226240**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-308)


# 70 ஆவது பிறந்த தின வாழ்த்துக்கள்

Happy Birthday

## 07.10.2020




16 வயதினிலே 1966 ஆம் ஆண்டு க.பொ.த (சா.த) தபால் அடையாள அட்டை



1984 ஆம் ஆண்டு 34 ஆவது வயதினிலே கடவுச்சீட்டுக்காக




50 ஆவது வயதினிலே தேசிய அடையாள அட்டைக்காக



60 ஆவது வயதினிலே சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக



63 ஆவது வயதினிலே 25 ஆவது திருமண நிறைவு நாளிலே



69 வயதினிலே ( 2019 )

## திரு. நல்லையா ஈஸ்வரராஜா

Taiwan நாட்டின் Lippel & Co. LTD ஸ்தாபனத்தின் Export Quality Control Manager ஆக 20 வருடமாக இலங்கை, இந்தியா, ஜெமன் (Yemen ), வங்காளதேசம் ஆகிய நாடுகளில் கடமையாற்றினார். 30 வருடமாக கொழும்பு பங்குச் சந்தையில் Asha Phillip Securities Ltd தரகர் மூலம் முதலீட்டாளராக இருந்ததுடன் பல முதலீட்டாளர்களுக்கு தனது ஆலோசனையும் வழங்கினார்.

கொழும்பில் அன்பு மன்றம் என்ற ஸ்தாபனத்தை 2003 இல் நிறுவி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கல்விச்சேவைப் பணிப்பாளர், அருள் கல்வி வட்டத்தை சேர்ந்த சட்டத்தரணி திரு. V. தேவசேனாதிபதி, புனர்வாழ்வு அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு. V. சிவஞானசோதி, தேசிய லொத்தர் சபை முன்னாள் உதவி பொது முகாமையாளர் திரு. V. சுந்தரேஸ்வரன் ஆகியோரின் பங்களிப்புடன் ஹட்டன், புளியாவத்தை மகாவித்தியாலத்திலும் கொழும்பு விவேகானந்த சபையிலும், கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரியிலும் G.C.E (O/L) மாணவர்களுக்கு 2003 ஆம் ஆண்டிலிருந்து சில ஆண்டுகள் கல்விக் கருத்தரங்கை நடாத்துவதற்கு முக்கிய காரணியாகவிருந்து பல மலையக மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கும் சட்டத்தரணிகளாக வருவதற்கும் அடித்தளமிட்டவர். தற்பொழுது சட்டத்தரணி திரு. V. தேவசேனாதிபதியின் அருள் கல்வி வட்டம் வடக்கு - கிழக்கு பகுதிகளில் பல இலட்சம் ரூபாய் செலவு செய்து G.C.E (O/L) கல்விக் கருத்தரங்கை தொடர்ந்து நடாத்தி வருகின்றார்.

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய கோவிலில் ( புதுக்கோவில் ) 25.03.2018 - 27.09.2020 காலப்பகுதியில் நிர்வாக சபையில் உப தலைவராக இருந்து கோவிலுக்கு அரும்பணியாற்றியவர். அத்துடன் கொக்குவில் பிரம்படி சனசமூக நிலையத்தின் 2018 ஆம் ஆண்டு நிர்வாகத்தில் உப தலைவராக இருந்து சேவையாற்றினார்.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் G.C.E (O/L) மாணவர்களின் 2010 ஆண்டில் இருந்து 9A சித்திபெற்ற மாணவர்களை ஊக்குவித்துக் கொண்டிருப்பதுடன் கிரிக்கெட் போட்டிகளுக்கும் தனது அனுசரணையை வழங்கினார்.

இன்று (07.10.2020) புதன்கிழமை தனது 70 ஆவது பிறந்தநாளை கொண்டாடும் நல்லையா ஈஸ்வரராஜாவிற்கு கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய பெருமான் நீண்ட ஆயுளைக் கொடுத்து மேலும் சமூகப்பணியாற்ற அருள் புரிய வேண்டும் என அவரை மனதார வாழ்த்துகின்றோம்.

(4390)

*Happy Birthday*

தாவடி தெற்கு,
பிரம்படி லேன்,
கொக்குவில்.

வாழ்த்துவோர் :
அன்பு மனைவி, அன்புச் சகோதர, சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள்.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.